குங்குமச் சிமிழ்

15-6-2011
விலை ரூ.4

நாகராஜன் சபதம்

விக்கிரமன்

முழு நாவல்

குலோத்துங்கன் சபதம், இராசாதித்தன் சபதம் போன்ற சரித்திரப் புதினங்களைப் போல், நாகராஜன் சபதமும் வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட கதை என்று நீங்கள் நினைத்தால் ஏமாந்து போவீர்கள். முழுக்க முழுக்க இது ஒரு சமூகக் கதை.

நீங்கள் நமட்டுச் சிரிப்பு சிரிப்பது எனக்குத் தெரிகிறது. 'புராணக் கதையாக இருக்கலாம்' என்று நீங்கள் என் விலாவில் மெல்லத் தீண்டி என்னைச் சீண்ட முயல்வது புரிகிறது.

புராணம், சமூகம், சரித்திரம் எல்லாம் ஒன்றுதான்; இப்போது அதைப் பற்றிய விவாதத்தில் இறங்கினால் நாகராஜன் சபதம் கட்டுரையாக மாறிவிடலாம்.
1982-ம் ஆண்டில் ஈழ நாட்டிற்கு நான் சென்றபோது அனுராதபுரத்தில் என் பழைய நண்பன் காசியைச் சந்திப்பேன் என்று கனவில் கூட நினைக்கவில்லை.
சரித்திரப் பிரசித்தி பெற்ற,

அனுராதபுரத்திலுள்ள பழைய வரலாற்றுக் காலச் சின்னங்களைப் பார்த்துவிட்டு வாடகைக் கார் ஒன்றை ஏற்பாடு செய்து கண்டி நகருக்குச் செல்ல சிற்றுண்டி விடுதி ஒன்றின் வாசலில் நின்று கொண்டிருந்த போது, அருகே வந்து நின்ற அன்பர் என்னைப் பாதாதிகேசம் ஒரு முறைக்குப் பலமுறை பார்ப்பதையும் தன் அருகே நிற்கும் பெண்மணியிடம் ஏதோ சொல்வதையும் ஒற்றைக் காதால் கேட்டு, ஓரக்கண்ணால் பார்த்து, வியப்புடன் நானும் ஒருமுறைக்கு இருமுறை திரும்பித் திரும்பிப் பார்ப்பது தெரியாமல் பார்த்தேன். அதற்கு மற்றொரு காரணமும் இருந்தது. அந்த அன்பர் அருகே தோளோடு உரசிக் கொண்டு 'கோகோ கோலா'வைச் சுவைத்துக் கொண்டிருந்த அந்தப் பெண்மணிதான்.

என்னை அப்படி விழுங்கி விடுபவர்போல் பார்த்தவர் (இனி அவன் என்று சொல்லலாம்) என் பள்ளித் தோழன் காசிதான் என்று தெரிந்து கொண்டேன்.

என் முதுகில் பலமாகத் தட்டி, கையைப் பிடித்துக் குலுக்கி மேல்நாட்டு முறைப்படி தோளை அணைத்துக் தழுவிக் கொண்டு (கன்னத்தில் முத்தம் கொடுக்காத குறைதான்) என்னுடைய பிள்ளைப்பிராயப் பெயரைச் சொல்லி எனக்கு மாணவர்கள் இட்டிருந்த 'நிக் நேமையும்' சொன்ன பிறகுதான் அவன் காசி என்று புரிந்து கொண்டேன். உடனே பிள்ளைப் பிராயச் சம்பவங்கள், நினைவுகள் மலரும் நினைவுகளாகப் பூத்தன.

எங்கு சென்றாலும் காசியும் நானும் ஒன்றாகவே செல்வோம். விளையாட்டு மைதானம், தேசியக் கூட்டங்கள், திரைப்பட அரங்குகள், எல்லா இடங்களிலும் இரட்டையராகவே காட்சி தருவோம். நாங்கள் உயர்சாதி, காசி தாழ்த்தப்பட்டவன் என்றெல்லாம் என் தாயார் பார்க்கமாட்டாள். இருவருக்கும் ஒன்றாகவே இலை போட்டுச் சோறு போடுவாள். சமயத்தில் கையை நீட்டச் சொல்லி உள்ளங்கையில் ஒரு கரண்டி தயிர்சோறு, கொஞ்சம் குழம்பு என்று அன்பாக அளிப்பாள்.

காசியும் நானும் எட்டாவது வரை ஒன்றாகவே படித்தோம். காமராசர் திட்டம் அப்போது இல்லாததால் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டி அவனால் தொடர்ந்து படிக்க முடியவில்லை. அவனைப் பள்ளிக்கு அனுப்பாமல் நிறுத்தி விட்டார்கள். அவனைத் தொடர்ந்து படிக்குமாறு செய்ய நான் எவ்வளவோ முயன்றேன். எங்கள் வீட்டிலும் வசதிக் குறைவுதான். நானே உதவித் தொகையில் படிக்க வேண்டிய நிலை.

காசியின் குடும்பம் ஊரை விட்டு வேறு ஊருக்குப் போய் விட்டது. 'பார்வையிலிருந்து மறைந்துவிட்டால் மனத்திலிருந்து மறைந்து விடுவார்கள்' என்ற பழமொழி உண்டு. நான் அப்படிப் பட்டவனல்லன். காசியை எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பேன். சிரிக்கும் போது பளிச்சிடும் அவனுடைய வெண்பற்களின் ஒளியை என்னால் எப்படி மறக்க முடியும்? எப்போதும் அவன் ஏதாவது கதை சொல்லிக் கொண்டிருப்பான். நகைச்சுவை, வீரம், சோகம் எல்லாம் நிறைந்திருக்கும். 'எல்லாம் நிஜமாக நடந்தவையா காசி?' என்று வியப்புடன் கேட்பேன்.

அவன் சிரிப்பான். "பைத்தியம், நிஜமென்று நம்பிவிட்டாயா? இட்டுக்கட்டிச் சொல்கிறான்" என்று என் தாயார் சொல்வாள்.

"நீ கண், காது, மூக்கு வைத்துக் கதை எழுதி ஒரு பத்திரிகைக்கு அனுப்பலாம்" என்று அவனைப் புகழ்வேன். அவன் அந்தத் தொழிலுக்கு வரவில்லை; என்னைத்தான் எழுத்துத் தொழில் பிடித்துக்கொண்டது.

காலம் வேகமாகப் பறக்கிறது. என் வாழ்க்கையில் எவ்வளவோ மாற்றங்கள். ஒருமுறை தீபாவளிமலர் தொடர்பாக திருநெல்வேலி சென்றிருந்தேன். ஜங்ஷனுக்கு அருகே ஒரு முடிதிருத்தகம். பஸ் புறப்பட ஒரு மணி நேரம் இருந்தது. நான்கு நாள்களாக அறுவடை செய்யப்படாத முகமுடிகளை வழிக்க அங்கே நுழைந்தேன்.

வெள்ளைத் துணியைப் போர்த்தி, சோப்பைத் தடவும் போது எதிரே கண்ணாடியில் என் முகத்தின் அழகை ரசித்தபோது, என் கன்னத்தை இதமாக வருடிய காசியை அடையாளம் கண்டு கொண்டேன்.

செய்யும் தொழிலே தெய்வம் என்று எப்போதும் புரட்சிக் கீதம் பாடும் நான் அந்த ஒரு கணம் திடுக்கிட்டேன்.

"காசி, என்ன இது?" வார்த்தைகள் தடுமாறின. காசி சிரித்தான். பற்களுள் ஒன்று விழுந்திருந்தது. ஆனால் அதே பளிச்.

"டேக் இட் ஈஸி" என்றானே பார்க்கலாம்!

"நான் ரொம்பவும் சந்தோஷமாக இருக்கிறேன். ஒருநாளைக்கு இருபது

ரூபாய் சம்பாதிக்கிறேன்” என்றான். எனக்கு அப்போது ஒரு நாளைக்கு நான்கு ரூபாய்தான் வருமானம்.

விடைபெறும் போது என் கன்னத்தை மற்றொரு முறை தடவிக் கொடுத்து, ஒன்றிரண்டு பிசிறுகளைச் சரிசெய்து, என் புனை பெயரைச் சொல்லி, “கதை எழுதுகிறாயாமே, எழுது எழுது. பெயரும் புகழும் பெற்று, நீ மேலும் மேலும் உயரவேண்டும்” என்று வாழ்த்தினான்.

“நான் இன்று உன்னோடு தங்கப் போகிறேன். இவ்வளவு வருடங்களாக நடந்த கதையை எல்லாம் சொல்ல வேண்டும்” என்றேன்.

“சந்தோஷமா இருக்கிறது. ஆனால் சாரிடா. நான் இன்று இரவு இராமேச்வரம் போகிறேன். அடுத்த வாரம் சிலோன் போகப் போகிறேன். அங்கே ஒரு நாளைக்கு நூறு ரூபாய் வருமானம் கிடைக்குமாம்” என்றான்.

அந்தச் சம்பவம் நடந்து பல வருடங்கள் ஆகிவிட்டன. முப்பது வருடங்கள் என்றுகூடச் சொல்லலாம். பல வருடங்களுக்கு அவன் பேச்சும் சிரிப்பும் முகத்தோற்றமும் என் மனத்திலிருந்து மறையவில்லை. அன்று அனுராதபுரத்துக் கடைவீதியில் காசியைச் சந்திப்போம் என்று கனவில்கூட நான் நினைக்கவில்லை. இன்னும் சொல்ல வேண்டியது அதிகமிருப்பதால் சுருக்கமாகச் சொல்கிறேன்.

காசியின் அருகே நின்றவள் அவனுடைய சிங்கள மனைவி. தமிழ்நாட்டில் முறையாக மணந்த மாரியம்மா, திருநெல்வேலி மாவட்டக் கிராமம் ஒன்றில் விவசாயத்தைக் கவனித்துக் கொண்டிருக்கிறாள். ஆண்டுக்கு ஒருமுறை காசி சொந்த கிராமம் சென்று கையிலுள்ள ரொக்கத்தை முதலீடு செய்து மாரியம்மாவிடம் கொடுத்து விட்டு பிரியாவிடை பெற்று, மாரியம்மா கண்ணீர் காயுமுன்பே மீண்டும் அவன் இலங்கைக்குப் புறப்பட்டு விடுவான். நான் வந்த விவரம் கேட்டறிந்த காசி, உடனே கண்டிக்குச் செல்ல தனி டாக்ஸியை ஏற்பாடு செய்தான். பின்ஸீட்டில் நாங்கள் மூவரும் ஒன்றாகவே அமர்ந்தோம். அந்தச் சிங்களப் பேரழகி காசிக்கு எப்படிக் கிடைத்தாள் என்று எனக்குக் கடைசிவரை வியப்பாக இருந்தது. அவ்வப்போது நான் அவளைத் திரும்பிப் பார்ப்பேன். எப்படிக் கேட்பது?

திருநெல்வேலியிலிருந்து புறப்பட்ட அவன் யாழ்ப்பாணத்தில் ஒரு முடிதிருத்தும் நிலையத்தில் பணியாற்றச் சேர்ந்தான். அவன் இலட்சியம் நாளொன்றுக்கு நூறு ரூபாய்க்கு மேல் சம்பாதிப்பது. யாழ்ப்பாணத்தில் அவ்வளவு வருவாய் கிடைக்கவில்லை. அதற்கு மாறாக அவப்பெயரும் கிண்டலும் சாதிப் பெயரைச் சொல்லி மேல் சாதியினரின் வசைமொழிகளும்தான் கிடைத்தன. ஆனால் ஈழமக்களின் பழக்க வழக்கங்கள், தொழில் நெளிவு சுளிவுகளை காசி நன்றாகப் புரிந்து கொண்டான்.

தாவுத்தோடு இணைந்து கள்ளக்கடத்தல் தொழிலில் ஈடுபட்டதாக பேசப்பட்டவர் மந்தாகினி. இவரது கதையை படமாக எடுக்கிறார்கள். இதில் மந்தாகினியாக நடிப்பவர் இலியானா டி குரூஸ்.

– க.ரவீந்திரன்

ஓரிரு ஆண்டுகளில் கண்டி நகரில் அவனுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது. சிங்களரும் தமிழரும் காழ்ப்புணர்வால் வெட்டி மடியாத சமயம். சிங்களர் நடத்தும் கடையில் வேலைக்குச் சேர்ந்தான். சிங்கள மொழியைச் சரளமாகப் பேசக் கற்றுக் கொண்டான். நகைச்சுவை ததும்பப் பேசுவதுடன் மரியாதை குறையாமல் பேசுவதும் சுறுசுறுப்பும் கலகலப்பான பேச்சும் கலந்திருந்த காசியை, கடை அதிபருக்கு மிகவும் பிடித்துவிட்டது. அவர் வீட்டிற்கு அடிக்கடி செல்லும்போது தான் காசி இந்தச் சிங்கள அழகியைச் சந்தித்தான். அப்போதுதான் அவள் பருவத்தின் முதல் படிக்கட்டில் காலடி எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய விழிகள் காசியை என்னவோ செய்தன. மொழி, இனம், சாதியைத் தாண்டிப் பாய வைப்பது காதல். சிங்கள முதலாளி வீட்டிலிருந்து உணவு கொண்டு வருவது அவன் வேலை. முதலிலெல்லாம் பதினைந்து நிமிடம் அரைமணியில் திரும்பி வந்து கொண்டிருந்தவன் இப்போது முதலாளி வீட்டிலிருந்து திரும்பி வர அரைமணி, முக்கால் மணி நேரமாகியது. சிங்கள முதலாளி சந்தேகப்பட்டார். ஒருநாள் திடீரென்று வீட்டிற்கு வந்து மறைந்து நின்று பார்த்த அவர் காரணத்தைக் கண்டுபிடித்து விட்டார்.

காசி நடந்த பழைய கதையைச் சொன்னான்: “சிங்களத்துச் சிங்காரி குலுங்கிச் சிரித்தாள். திடீரென நான் கேட்டேன். ‘நீ சிரிக்கும் போது உன் அழகிய பற்கள் என்னை மேலே பேச விடாமல் செய்கின்றன. கொஞ்சம் பற்களைக் காட்டியா சிரிக்கிறாய்?’ எல்லாப் பற்களையும் எண்ணச் சொல்கிறாயா? பற்கள் சுளுக்கிக் கொள்ளப் போகின்றன!”

இதைக் கேட்டு அவள் தொடர்ந்து குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள். ‘குலுங்கி குலுங்கி’ என்பதற்கான உண்மை அர்த்தமும் வடிவமும் பெண்களிடம்தான் பார்க்க வேண்டும் என்று சொல்லி நிறுத்திய காசி, தன் மனைவியை ஒருமுறை நோக்கிவிட்டு “என்னடா நான் இப்படிப் பேசுகிறேனே என்று நினைக்காதே. கொஞ்சம் பச்சையாய்ப் பேசுவது என் பேச்சில் கலந்து விட்டது. பச்சையில் நகைச்சுவையும் அதிகம் சேர்ந்திருப்பதால் யாரும் விகல்பமாகவும் வித்தியாசமாகவும் நினைத்துக் கொள்வதில்லை.

“உன் முத்துப் பல்வரிசை என்னை ‘நல்ல மொந்தைக் கள்ளைப் போல’ நீ சிரிக்கும் போது... அது என்ன கச்சை அணிவது வழக்கமில்லையா? உங்களூர் தேங்காய் இரண்டு குலுங்குவது போல் குலுங்குகிறதே! நாளையிலிருந்து நீ உள்பாடி போட்டுக் கொள்ளாமல் சிரித்தாயோ

தெரியும் சேதி என்றவனைச் சிறு கூச்சத்துடன் பார்த்தவளை நோக்கி, ‘அப்படியே உன் காலடியில் விழுந்து விடுவேன்’, ‘நின்னையே ரதி எனச் சரணடைந்தேன்’ ஆமாம் என்று கூறினேன். அவள் முகம் சிவந்தது.

“அவள் துள்ளி எழுந்து உள்ளே ஓடினாள். விளையாட்டில் பாதியில் ஏன் எழுந்து செல்கிறாள் என்ற எண்ணத்தில் துரியோதனன் மனைவி பானுமதியின் சேலையைப் பிடித்திழுத்த கர்ணனைப் போல் நான் அவள் கரத்தைத் தாவிப் பிடிக்க முயன்றேன். திரும்பிப் பார்த்தேன். பின்புறம் என் முதலாளி நின்று கொண்டிருந்தார். ‘ஐயோ’ என்றலறினேன். தலை வேறு, உடல் வேறாகி விடப் போகிறது என்று நான் அஞ்சி நடுங்கி கழுத்தைத் தடவிக் கொண்டேன்.

“ஆனால் அவர் முகத்தில் கோபம் இல்லை. ‘காசி’ என்று அன்புடன் அழைத்து அவர் பேசினார். உபதேசம், ஆலோசனை அறிவுரை எல்லோம் சொன்னார். அவர் சொன்ன அறவழியில் ஒன்று என்னைத் திடுக்கிட வைத்தது.

2

“அவர் மிகவும் அமைதியாக ஆனால் கடுமை நிறைந்த குரலில் சொன்னார். ‘காசி! நீ அவள் மீது ஆசை கொண்டிருக்கிறாய் என்பது தெரிகிறது. உன்னை என் கடையின் வாரிசாக ஆக்கி, உனக்கு மிக ரகசியமாக நான் அறிந்த வித்தையைச் சொல்லிக் கொடுக்க நினைத்தேன். ஆனால் இரண்டையும் பாழ்படுத்த முடிவு செய்து விட்டாய்...’

“அவர் கடையின் வாரிசு. அவர் அறிந்திருந்த கலையின் ரகசியம் அறிதல் அல்லது இந்த அழகியின் தொடர்பை விட்டுவிடுதல் எதை ஏற்பது? எவ்வளவு தர்மசங்கடமான நிலை? ஒன்று சொல்ல மறந்து விட்டேன். விஷக்கடியிலிருந்து உயிர்பிழைக்க வைக்கும் மந்திரம் அறிந்தவர் என் முதலாளி. அதனால் அவருக்கு அந்த வட்டாரத்தில் பெரும் மதிப்பு, மரியாதை, கண்டிப்பகுதியில் பெருங்காடுகள் இருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். விஷப் பாம்புகள் சர்வ சாதாரணமாகத் திரியும். ஆனால் அவை யாரையும் உடனே கடித்து விடுவதில்லை. தீண்டி விட்டாலோ இரண்டு மணி நேரத்தில் ஆள் ‘குளோஸ்’. பாம்புக் கடிபட்டவரிடமிருந்து செய்தி எடுத்துக் கொண்டு பெரும் ஓலமிட்டவாறு எங்கள் சிகை அலங்காரக் கடை நோக்கி ஓடிவருவார்கள், பாம்புக்கடிக்கு

குத்துச் சண்டை வீரர் மைக் டைகுன் புறாக்களை வளர்ப்பதில் ஆர்வமுள்ளவர். சண்டை முடிந்து, சமாதான மனநிலைக்க வந்துவிட்டாரோ?

– க.ரவீந்திரன்

ஆளானவரின் உறவினர்கள். என் முதலாளி உடனே செய்தியை அறிந்து கொள்வார். அவரிடம் பரபரப்பு இருக்காது. செய்தி கொண்டு வந்தவன் கன்னத்தில் பளீரென ஓர் அறை கொடுப்பார். சாதாரண அறையா அது? மரண அடி. அடிபட்டவன் தலைசுற்றி மயக்கமாக அங்கேயே விழுந்துவிடுவான். பார்ப்பவர்களுக்குப் பெரும் கோபம் வரும். அபாயச் செய்தியைச் சொல்ல வந்தவனை இப்படி அடித்து விட்டாரே என்று கோபங்கொள்வர். ஆனால், விவரம் அறிந்தவர்களுக்கு அந்த அடி நியாயம் என்றே தோன்றும்.

என் முதலாளி நேரே பாம்புக் கடிபட்டவர் இருக்குமிடம் செல்வார். பாம்பால் தீண்டப்பட்டவரைப் பார்ப்பார். பாம்பு கடித்த இடத்தைச் சுற்றிலும் பார்ப்பார். சிறிது நேரத்தில் பாம்புக் கடிபட்டவர் தூங்கி விழித்தெழுந்தவர் போல் எழுந்து விடுவார்.

அங்கே கடையில் அடிபட்டு விழுந்து கிடந்தவரும் எழுந்து உட்கார்ந்து ‘என்ன நடந்தது?’ என்று வியப்புடன் கேட்பார்.

கடித்த பாம்பும் விரைந்தோடி வந்து உயிர் பிழைத்தவர் காலடியில் சுருண்டு விழுந்து இறந்து விடும்...”

காசி சொல்லி வருவதை நான் வியப்புடன் கேட்டு வந்தேன். விட்டலாச்சாரியா கதை மாடலாய், இந்திரா சௌந்தரராஜன் எழுதும் டி.வி. தொடர் போல் தோன்றும். என்றாலும் எனக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. கதை புனைந்து சொல்வதில் சிறுவயதிலிருந்தே காசி கெட்டிக்காரனாயிற்றே! என் முகக் குறிப்பிலிருந்து என் சந்தேகத்தை காசி புரிந்து கொண்டு

விட்டான். நீ நினைப்பது போலில்லை. வேண்டுமானால் என் மனைவியைக் கேட்டுப்பார்' என்று கூறிவிட்டுத் தொடர்ந்தான்.

"என் முதலாளியை விஷராஜா என்று சொல்லலாம். அவருக்கு வயது எவ்வளவு என்று என்னால் மதிப்பிட முடியவில்லை. அருகே கடை வைத்திருந்தவர் சொல்லியிருக்கிறார். ஐம்பது வருடங்களுக்கு மேலாக என் முதலாளியைத் தனக்குத் தெரியும் என்று. எத்தகைய விஷப்பாம்புக் கடியிலிருந்தாலும் கடிபட்டவரை அவர் பிழைக்க வைத்து விடுவாராம். சிறு வயதிலேயே அந்த மந்திரசக்தி அவருக்குக் கைவந்த கலையாகி விட்டதாம். அதற்கு முக்கிய காரணம், அவர் கடைப்பிடித்து வந்த பிரம்மச்சர்யம்தானாம். அவரும் அதை அழுத்தமாகச் சொன்னார். என் முதலாளியைக் காதல் வயப்படுத்த எவ்வளவோ பேரழகிகள் முனைந்திருக்கிறார்கள். ஆயினும் முடியவில்லை என்று அவர் கதை கதையாய்ச் சொன்னார். 'அவர் இருக்கும் இடத்திற்கு விஷப்பாம்புகள் வரவே வராதாம். அவர் வாசனை பட்டாலே அவை சுருண்டு விழுந்து விடுமாம்' என்று அருகேயிருந்த கடைக்காரர் சொன்னது முற்றிலும் உண்மைதான்.

ஒருமுறை என் முதலாளியுடன் அருகே உள்ள கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்தேன். கொடிய விஷப்பாம்புகளைப் பற்றியும் அவற்றை வசப்படுத்துவது எப்படி என்பதைப் பற்றியும் அவர் சொல்லி வந்தார்.

'உங்களைக் கண்டால் கொடிய பாம்புகள் ஓடிவிடுமா?'

'ஆமாம். அதோ பார். அருகே சென்று பார். அங்கே என்ன இருக்கிறது என்று பார்த்து வந்து சொல்'

நான் தயக்கத்துடன் புதர் ஒன்றின் அருகே சென்றேன். அங்கே–

எட்டடி நீளமுள்ள கொடிய நாகம் ஒன்று சுருண்டு படுத்துக்கொண்டிருந்தது. நான் அலறியடித்துக் கொண்டு ஓடிவந்தேன்.

'சர்ப்ப வெதா– நாகம் – கொடிய நாகம் அங்கே' என்று நடுங்கியபடியே சொன்னேன். சர்ப்பவெதா என்றால் பாம்பு வைத்தியர். அவர் சிரித்தார். பொய் சொல்கிறாய் என்றார்.

‘இல்லை வெதா – பாம்புதான். அருகே சென்ற என் காலடி ஓசை கேட்டுச் சீறியிருந்தால் அவ்வளவுதான்’ என்றேன் நடுக்கத்துடன்.

‘சீ... நானிருக்குமிடத்தில் பாம்பா? உனக்குத் தெரியாதா? என் வாசனை இருக்குமிடத்துக்கு நாகம் வரவே வராது...’

‘இல்லை வெதா...’ என்றேன். மறுபடியும் ரொம்ப நடுக்கம்.

‘காசி! வரவர நீ பொய் சொல்கிறாய். அங்கே போய்ப் பார். இப்போது போய்ப் பார்’ என்று என்னைத் தட்டிக் கொடுத்து அனுப்பினார். அடிமேல் அடி வைத்துப் போய்ப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! ஏதோ ஒரு மூலிகைக் கொடி சுருண்டு கிடந்தது.

‘காசி! எந்த நாகமும் என் வாசனையை முகர்ந்தால் அருகே வராது’ என்று வெதா சொல்லிவிட்டுத் தான் விஷக்கடிக்கு வைத்தியம் செய்யும் கலையைச் சிறு வயதிலேயே பழகிக் கொண்டதாகவும் புத்த பிட்சு ஒருவர் ஸ்ரீகிரி மலையில் தனக்குக் கற்றுக் கொடுத்ததாகவும் சொல்லி, ‘காசி! இந்த மந்திரம் எனக்குப் பலிப்பதற்கும் நான் கொண்டுள்ள கடுமையான விரதம்தான் காரணம். உனக்குத் தெரியாது. யாருக்குமே தெரியாது. சுத்தப் பிரம்மசர்யத்தை நான் கடைப்பிடிக்கிறேன். மது, மாது இரண்டிலும் நான் மயங்கிய தில்லை’ என்றார்.

நான் வியப்புடன் அவரைப் பார்த்தேன். என் முதலாளி சர்ப்ப வெதா – பாம்பு வைத்தியர் – அவர் கல்யாணம் செய்து கொள்ளவில்லை என்பது எனக்குத் தெரியும். கல்யாணம் செய்து கொள்ளாததால் பிரம்மசாரி என்று சொல்லிவிட முடியாது. ஆனால், அவர் கடுமையாக உடலாலும் மனத்தாலும் பெண்ணைத் தீண்டாமல் பிரம்மசர்ய விரதத்துடனிருப்பது எனக்கு இதுவரையில் தெரியாது. அவரைப் பற்றிப் பழைய கதைகள், செய்திகளை வம்பு பேசுவார்கள். ஆனால் அவர் காதுபடப் பேசமாட்டார்கள். சிகை அலங்காரக் கடை முதலாளி என்ற மரியாதை, அவர் சர்ப்ப வெதா ஆகிய இரண்டும் அனைவரிடமும் ஒருவித அச்சத்தை ஏற்படுத்தும்.

‘காசி, நீ என்ன நினைக்கிறாய் என்று எனக்குத் தெரியும். பிரம்மசாரி; கல்யாணமாகாதவர். ஆனால் வீட்டிலே ஒரு பெண் இருக்கிறாளே, அவள் யார்? ‘அப்பா அப்பா’ என்றே என்னை அழைக்கிறாளே என்ற சந்தேகம் உனக்கு ஏற்பட்டிருப்பது எனக்கும் புரிகிறது. காசி! அது ஒரு பெரிய கதை. சுருக்கமாகச் சொல்கிறேன். அது நடந்து பதினெட்டு

வருடங்கள் ஆகிவிட்டன. அந்தக் காலத்தில் வாலிப மிடுக்குடன் மிக அழகிய தோற்றத்துடன் இருப்பேன்' என்று கூறி, கண் சிமிட்டி, 'அப்படித்தான் என்னைப் புகழ்வார்கள். என்னைப் போய் ஓர் அழகன் என்பார்கள்! அழகனோ இல்லையோ, உருண்டு திரண்ட கால்களும் தோளும் மிடுக்கான நடையும் காண்பவர்களை ஆசை கொள்ளச் செய்யும்.

பெண்கள் என்னை மயக்கப் பல சாகசங்களைச் செய்வார்கள். அப்படியோர் இளம் பெண்ணிடம் நான் இக்கட்டான சூழ்நிலையில் சிக்கிவிட்டேன். அவள் கல்யாணமானவள். ஒரு வயதுக் குழந்தை வீட்டிலுள்ள தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தது. அவளுடைய ஒற்றைத் தலைவலியைத் தீர்க்க மருந்தளிக்க அவள் வீட்டிற்கு இரண்டு மூன்று முறை சென்றேன். அவள் பார்வையும் பேச்சும் சிரிப்பும் பிடிக்காமல் எனக்கு எரிச்சல் தந்தன. அவளுக்கு சுராங்கனி என்று பெயர். ஒருநாள் அவள் தன் தாபத்தைப் புலப்படுத்திக் கொண்டுவிட்டாள். ஆனால் மிகப் பிரயாசையுடன் அவளுடைய காம அணைப்பிலிருந்து விடுபட்டேன். இதை இன்று ஒரே வார்த்தையில் சொல்லி விட்டேன். என் முழுபலத்தையும் பயன்படுத்தி அவளைப் பிடித்துத் தள்ளினேன். திரும்பிப்பாராமல் வந்துவிட்டேன். இரண்டுமணிநேரம்கழித்துஅவளுடைய கணவன் வீட்டிற்கு ஓடோடி வந்தான். மூச்சுப் பேச்சில்லாமல் தன் மனைவி கிடப்பதாகவும் எப்படியாவது அவளைக் காப்பாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான்.

அவளை நாகம் தீண்டியிருக்கிறது என்று எனக்குத் தெரிந்துவிட்டது. ஒன்றைச் சொல்ல மறந்துவிட்டேன். என் மீது வெஞ்சினம் கொண்டு என் விரோதி ஒருவன் அலைந்து கொண்டிருந்தான். மாணிக்கநாகம் என்ற ரஜநாகய (நாகராஜா)

காலம் வரும்!

பெஞ்சமின் டிஸ்ரேலி, முதன் முதலாக பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் பேசியபோது உறுப்பினர்கள் கேலி செய்தார்கள். 'உட்கார்! உட்கார்!" என்று கூச்சல் போட்டார்கள். "இப்போது உட்கார்கிறேன். காலம் வரும்! இன்னொரு நாள் என் பேச்சை இதே சபையில் விரும்பிக் கேட்பீர்கள்" என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தார். பின்னாளில் பிரதமராகப் பதவியேற்று அதே சபையில் பேசினார் டிஸ்ரேலி!

- முக்கிமலை நஞ்சன்

சுராங்கனியின் வீட்டிற்கு வைத்யம் செய்ய நான் வருவதை அறிந்து என்னைத் தீர்த்துக்கட்ட, தன் நான்கு பற்களாலும் கொத்தச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். சுராங்கனிக்கு என் மீது காமம் இல்லை. ஆனால் மாணிக்கநாகம் அவளை ஏற்பாடு செய்து எப்படியாவது என் பிரம்மச்சர்யத்தை இழக்க வைத்து என் மந்திரசக்தியை இழக்கச் செய்யச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் அழகில் மயங்கிய நிலையில் நான் இருந்து விட்டால் ஒரே போடாக என்னைக் கொத்திவிட்டு ஓடிவிடத் திட்டமிட்டு மறைந்திருந்தான். ஒருவேளை சுராங்கனி தன் சாகசத்தில் தோற்றுவிட்டால் பலம் கொண்ட மட்டும் அவளைக் கொத்தி விட்டோடி விடுவது என்று திட்டமிட்டிருந்தான்.

அன்று அவன் சதித் திட்டம் நிறைவேறவில்லை. நான் காமத்திற்கு அடிமையாகாமல் தப்பிவிட்டேன். மாணிக்கநாகத்திற்கு ஆத்திரம்; அவமானம், தன் தோல்வியைச் சுராங்கனியிடம் காட்டிவிட்டது. சுராங்கனியை நான் காப்பாற்றவில்லை. உனக்கே தெரியும். பாம்பு கடித்த செய்தியைத் தெரிவிக்க வருவதற்கு முன்பே நான் அறிந்து விடுவேன். செய்தி கொண்டு வந்தவரைப் பலமாக அடித்து வீழ்த்தி விட்டு நாகத்தால் தீண்டப்பட்டவர் இருக்குமிடம் நோக்கி ஓடுவேன். மந்திரம் ஜபிப்பேன். கடித்த பாம்பு விரைந்து என்னை நோக்கி வரும். அருகே உள்ளவர்கள் அடித்து வீழ்த்துவர். கடிபட்டவர் பிழைத்துக் கொள்வார். திரும்பி வந்து மயக்கமாகக் கிடக்கும் செய்தி சொல்ல வந்தவருக்கு சிகிச்சை செய்து அவரைப் பழைய நினைவு அடையச் செய்வேன்.

நான் இரண்டும் செய்யவில்லை. சுராங்கனி வீட்டிற்குச் சென்று நீலமாகி விட்ட உடலை நோக்கி மெல்லச் சிரித்துத் திரும்பினேன். மனைவியை இழந்த அவள் கணவன் இரண்டு நாள்களில் மாரடைப்பால் இறந்துவிட்டான். அந்த வீட்டுத் தொட்டிலில் அழுது கொண்டிருந்த அழகிய பெண் குழந்தைதான், இந்த சுனிதா. தாய் தந்தையை இழந்தவள் என்ற எண்ணமே அவளுக்கு ஏற்படாமல் சுனிதாவை வளர்த்தேன். ‘அப்பா அப்பா’ என்றே என்னை அழைப்பாள். இப்போது புரிந்ததா பிரம்மச்சர்யம் காத்துத் தந்தையானவன் இந்த சர்ப்ப வெதா என்று?’

அவர் சொன்னதைக் கேட்டு என் உடலெங்கும் வியர்த்தது. பெருமூச்சு விட்டேன். உண்மையிலேயே என் முதலாளி, ஊர் உலகம் போற்றும் ‘அபய சிங்கவெதா’ ஓர் உயர்ந்த மனிதர்தான்.

என் உடல் சிலிர்த்தது. மெல்லிய நடுக்கம் ஏற்பட்டது. என்

காலடியிலிருந்த மண் புதைமணல் சரிவது போல் தோன்றியது. சுராங்கனியை மறக்க வேண்டுமாமே! அதெப்படி முடியும்?

‘சுராங்கனி சுராங்கனி’

மாறுகெனவா

என்று அந்த மீன்விழியாள் துள்ளும் நடையுடன் பாடி வரும் தோற்றம் என் எதிரே நர்த்தனமாடியது.

3

வாடகைக் கார் விரைந்து கொண்டிருந்தது. நடந்த கதையைக் காசி சுவையுடன் சொல்லிக் கொண்டிருந்தான்.

கதை எழுதுவதில் தனித்திறமை தேவையைப் போல், சொல்வதிலும் தனிப்புலமை வேண்டும். கண் எதிரே நடைபெறுவது போல் உணர்ச்சியுடன் சற்று நடிப்புடன் சொல்ல வேண்டும். கேட்பவருக்குச் சோர்வேற்படாமலும் சொல்ல வேண்டும்.

அந்த நாளில் வேலைக்காக நான்அலைந்து கொண்டிருந்த போது சிறிது காலம், திரைப்படம் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றில் கதை இலாகாவில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். பிரபலமாக எழுதக்கூடிய எழுத்தாளர்கள் சிலர் அந்தக் கதை இலாகாவில் பணியாற்றிக் கொண்டிருந்தனர். கௌரவத்திற்காகவே சிலருக்கு ஒரு வேலையும் இல்லாமல் சம்பளம் கொடுத்துக் கொண்டிருந்தார் நிறுவன அதிபர்.

தன் கதை திரைப்படமாக்கப்பட வேண்டும் என்ற ஆசையுடன் கதையை, பெரிய நோட்டுப் புத்தகத்தில் எழுதி எடுத்துக் கொண்டு பலமான சிபாரிசுடன் அலுவலகத்திற்குப் படையெடுத்து வந்து அலுவலக வரவேற்பறையில் கனமான கனவுகளோடு கொட்டாவி விட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த காட்சியை என்னால் மறக்க முடியவில்லை. தன் கதையைப் படித்துக் காட்ட அவர்கள் சில வேளைகளில் செயற்கையாக நடித்தனர். திரைப்படக் கதாசிரியராக வரவேண்டும். ‘டைட்டில் கார்டில் தன் பெயர் வர வேண்டும். ஆயிரக்கணக்கில் பணம் வரவேண்டும். காரில் போக வேண்டும்’ என்ற ஆசையோடு கதையை வாய்விட்டுப் படிப்பார்கள். கதையைப் படித்து

முடித்தவுடன் "கதை நன்றாக இருக்கிறதா சார்" என்று கேட்பார்கள். "கண்விழித்து மிகப் பிரயாசையுடன் எழுதினேன் சார்!" என்று நூறு சார் போட்டுக் குழைவார்கள்.

"ஏன் சார், கதையை நீங்களே படித்து முடிவெடுக்கக்கூடாதா? என்னை ஏன் படிக்கச் சொல்கிறீர்கள்?" என்று ஏக்க விழிகளோடு கதாசிரியர் ஒருவர் கேட்டார். குரல் பரிதாபமாக இருந்தது. அவருக்குப் படிக்க வரவில்லை. கதை சொல்வதற்குத் தனித்திறமை வேண்டும். வர்ணனைகளிலேயே கதையை நடத்திச் செல்பவர்கள் பாடு திண்டாட்டம்தான். சம்பவங்கள், திடீர் திருப்பங்கள், பலவித உணர்ச்சிகளைப் புலப்படுத்தும் உரையாடல்கள் எல்லாம் நிறைந்திருக்க வேண்டும். அவற்றை ஏற்றத்தாழ்வுக் குரலுடன் படிக்க வேண்டும். அவர்கள் படிப்பதை நான் கவனத்துடன் கேட்டு அன்று மாலையோ மறுநாளோ, படமுதலாளி, டைரக்டர்கள் அவர்களுடைய ஜால்ராக்கள் சூழ்ந்திருக்கும் போது எடுத்துச் சொல்ல

கத்ரினா கய்ப் நடித்த 'ஷீலா கி ஜவானி' அவரை புகழின் உச்சிக்கு கொண்டு சென்றுள்ளது. டெல்லி பெல்லி என்ற நகைச்சுவைப் படத்தில் இவர் இப்போது நடிக்கிறார்.

- க.ரவீந்திரன்

வேண்டும். ‘கதை டிஸ்கஷன்’ தொடங்கும்.

கதையைப் பற்றி அ, ஆ, தெரியாதவரும் யோசனை கூறுவதுண்டு. சமயங்களில் டீ கொண்டுவரும் பையன்கூட, கருத்தைக் கூறுவான். சரி – அவற்றை எல்லாம் வர்ணிக்க இது இடமில்லை. காசி சுவாரஸ்யம் மிகுந்த கதையைச் சொல்லி வந்தான். பாவம் கெடாமல், சுருதி குறையாமல் சொல்லி வந்தான். இடையிடையே அவனுடைய சிங்கள மனைவி சிங்கள மொழியில் அவனிடம் ஏதோ கூறுவாள். அவனும் பதில் சொல்வான்.

“அவளுக்குச் சற்று வெட்கமாக இருக்கிறதாம். நடந்தவை ஒன்றுவிடாமல் ஏன் சொல்கிறீர்கள்?” என்று அவள் கடிந்து கொண்டிருக்கிறாள்.

“என் உயிர் நண்பன், அவனிடம் சொல்வதில் என்ன தவறு? அவன் உன்னைப் பற்றி தவறாக நினைக்கமாட்டான். உன்னைப் போன்ற அழகியை நான் மணந்ததைப் பாராட்டுகிறான். இதே போல் என்றும் மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறான்.” என்று அவளைச் சமாதானப்படுத்தியதாக அவன் என்னிடம் கூறினான்.

‘உன்னைப் பார்ப்பவர்கள் பலர் தவறான எண்ணத்துடன் பார்க்கிறார்கள். ஆனால் என் நண்பன் அப்படிப்பட்டவனல்லன். நண்பன் மனைவியைச் சிலர் வேறு கண்களுடன் பார்ப்பார்கள். இவன் அப்படியில்லை. உன் திறமையை அவன் ஆராதிக்கிறான். இன்னும் சொல்லப் போனால் சில ஆண்டுகளுக்குக் குழந்தை பெற்றுக் கொள்ளச் செய்துவிடாதே என்றும் எனக்கு ஆலோசனை சொல்கிறான்’ என்று அவளிடம் தான் பெருமையாகச் சொன்னதாக என்னிடம் காசி சொன்னான்.

“ஆமாம்... ஆமாம். நீங்கள் நடந்த கதையைச் சொல்லி வரும்போது உங்கள் நண்பர் அடிக்கடி திரும்பிப் பார்த்ததார். ‘விழிகளில் கபடம் இல்லை’ என்று அவள் சான்றிதழ் கொடுத்து விட்டாள்’ என்றும் கூறினான்.

இவ்வளவு செய்திகளையும் அவன் எப்போது அவளிடம் சொன்னான்? நான் அவளை அடிக்கடி திரும்பிப் பார்த்தது மெய்தான். ஆனால் கபடம் எதுவும் இல்லை என்பதை அவள் எப்படித் தெரிந்து கொண்டாள்? சும்மா ‘கதை’ விடுகிறான் காசி. சுவையுடன் அவன்

கூறிவரும் கதையில் எவ்வளவு சதவீதம் உண்மை என்று நான் ஏற்றுக் கொள்வது உண்மையோ, அவனே இட்டுக்கட்டிச் சொல்கிறானோ ஆவலை அதிகப்படுத்தும் வகையில் சொல்கிறான்.

கண்டிக்குப் போவதற்குள் முழு வரலாற்றையும் முடித்து விடுவானோ?

காசியின் காதல் என்ன ஆயிற்று?

விஷ டாக்டரிடம் விஷ முறிவை இவன் கற்றுக் கொண்டானா?

சர்ப்ப வெதாவைக் கொன்று விடுவது என்ற நாகராஜன் சபதம் நிறைவேறியதா?

விஷ டாக்டர் வளர்த்த பெண்ணை, காசி மணந்து கொண்டானா?

எனக்குப் பரபரப்பு. அறிய ஆவல். ‘பொன்னியின் செல்வன்’ உரைநடைக் காப்பியத்தை அமரர் கல்கி முடித்த பிறகு, ‘பொன்னியின் செல்வனில் வரும் கதை மாந்தர்கள் என்ன ஆனார்கள்? ஆதித்த கரிகாலனைக் கொன்றவர் யார்? நந்தினி என்ன ஆனாள்? குந்தவ்வையை வல்லவரையன் வந்தியத்தேவன் மணந்தானா?’ என்பன போன்ற கேள்விகளை வாசகர்கள் ஆவலுடன் கேட்டது போல் நானும் காசியைக் கேட்கத் துடித்தேன்.

கண்டி நகரை நாங்கள் அடையும்போது பொழுது சாய்ந்து விட்டது. குளிர் தொடங்கி விட்டது. மறுநாள் கண்டியில் பிரபல புத்த மதத் திருவிழா. ஊர் கோலாகலமாகக் காட்சியளித்தது. கண்டி நடனம் புகழ் வாய்ந்தது. கண்டி நடனம் காண நாட்டின் பல பாகங்களிலிருந்தும் உல்லாசப் பயணிகள் வந்து கூடியிருந்தனர். தங்குவதற்கு விடுதி கிடைப்பது கடினமாயிருந்தது. கடைசியில் ஒரு சிற்றுண்டி விடுதியின் பின்பகுதியில் ஓர் அறை இரவு மட்டும் தங்குவதற்குக் கிடைத்தது. ஓர் அறையில் எப்படி மூவர் தங்குவது? அந்த அறையில் இரண்டுக்கு மேற்பட்ட கட்டில்கள் இருந்தன. வேறு இடம் கிடைக்கவில்லை. மூவரும் ஒரே அறையில் தங்குவது சரியா, நியாயமா, முறையா? எனக்குப் புரியவில்லை. மூன்று ஆண்கள் தங்கலாம். இரண்டு பெண்கள் ஓர் ஆண் என்றாலும் பரவாயில்லை. இரண்டு ஆண்கள் ஒரு பெண் தங்க விடுதியார் எப்படி அனுமதித்தார்?

நான் சைவ உணவுக்காரன். அவர்கள் இருவரும் அசைவ உணவைச் சாப்பிட்டார்கள். அதற்கு முன்பு அவர்கள் இருவரும் இலேசாக மது அருந்தினார்கள். அந்தப் பழக்கம் எனக்கு ஏற்படவில்லை. "இது சகஜம். குளிருக்கும் ஏற்றது" என்று கூறி காசி மெல்லச் சிரித்தான். "இல்லை. எனக்கு சப்பாத்தி போதும்" என்று சொல்லிவிட்டு இரவு உணவை முடித்துக் கொண்டேன். இலங்கை தேயிலைப் பானம் சுவையாக இருந்தது. சந்தடி மிகுந்த அந்த உணவு விடுதியின் உணவு மேஜையைச் சுற்றி அமர்ந்து உற்சாக பானமும் பலவித அசைவ உணவும் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் காசியின் மனைவியை விழுங்கி விடுவது போல் வைத்த கண்ணை இமைக்காமல் பார்த்து ஏதோ பேசிச் சிரித்துக் கொண்டது எனக்குப் பயமாகவும் இருந்தது.

"நாம் சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு அறைக்குள் சென்று விடுவோம். திடீர் திடீர் என்று இங்கே சிறு கலகம் ஏற்படும். அதில் நாம் சிக்கிக் கொள்ளக்கூடாது. வா, அறைக்குப் போகலாம்" என்று காசி அழைத்தான்.

பழங்காலக் கட்டடம். சுமாரான அறை. எனக்குக் கூச்சமாக இருந்தது.

"டேய், உன் கூச்ச சுபாவம் புரிகிறது. அவள் படுத்தவுடன் தூங்கிவிடுவாள். அதுவரை நாம் வெளியேயுள்ள வராண்டாவில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்போம். அவள் தூங்கியவுடன் நாம் அறைக்குள் செல்வோம். நீ மற்றொரு கட்டிலில் தயக்கமில்லாமல் படுத்துக் கொள்ளலாம். வித்தியாசம் பார்க்காதே" என்றான்.

காசிக்கு எவ்வளவு பெருந்தன்மை! நம்பிக்கை!

"மரியாதையாகப் படவில்லையே. நான் வெளியே

உலகிலேயே...

உலகிலேயே பசிபிக் கடலைத் தனியாகக் கடந்த முதல் இளவயது வீரன் (14 வயது) சுபரு டாக்கா காஷி என்ற ஜப்பானியச் சிறுவனே! 9 மீட்டர் படகு ஒன்றில் இரண்டு மாதங்களுக்குத் தேவையான தண்ணீர், உணவு ஆகியவற்றுடன் புறப்பட்டான் தன்னந்தனியாக! மூன்று வாரங்கள் கழித்துப் பெற்றோருடன் தொடர்பு கொண்டான். 1996 அக்டோபர் மாதத்தில் ஒருநாள் வெற்றிகரமாக ஸான்பிரான்சிஸ்கோவை அடைந்தான்.

- முக்கிமலை நஞ்சன்

மாவீரன்

விமர்சனம்

படுத்துக் கொள்கிறேன்” என்றேன்.

“இங்கே குளிர் எலும்பை உலுக்கும் வகையில் நடுங்கத் தொடங்கிவிடும். வெளியே படுக்க முடியாது” என்றான் காசி.

“காசி! எனக்கும் களைப்பு மிகுதியால் தூக்கம் வருகிறது. தூக்கம் கண்களைத் தழுவும் வரையில் பேசுவோம். பிறகு அறைக்குள் சென்று படுத்துக் கொள்வோம்” என்றேன்.

“கதை இன்னும் எவ்வளவு இருக்கிறது? ஆவலைத் தூண்டி விட்டாய். கதை முடிவு தெரிந்துவிட்டது. கதையின் முடிவைக் கூறி கதையைச் சொல்வது ஒரு வகை” என்றேன் நான், மீண்டும்.

“கதையா? டேய் உண்மைச் சம்பவம்டா. கதையின் முடிவு தெரிந்துவிட்டதா? எங்கே கதையின் முடிவைச் சொல்லு பார்க்கலாம்” என்றான் காசி, சற்றுக் கோபத்துடன்.

ராம் சரண் (சிரஞ்சீவியின் புதல்வர்) காஜல் அகர்வால் இணைந்து நடித்துள்ள முன்ஜென்மக் காதல் கதை. பாதி சரித்திரம், பாதி சமூகப் படமாகக் கலந்து, பிரமிக்க வைத்திருக்கிறார்கள்.

பைக் ரேஸ் வீரராக ஆரம்பக் காட்சியிலேயே அட்டகாசமாக என்ட்ரி ஆகிறார் ராம்சரண்.

ஆட்டோவில் செல்லும் வழியில் பஸ் நிறுத்தம் ஒன்றில் காஜல் அகர்வாலைக் காணும் ராம் சரணுக்குத் திடீரென ஒரு ஈர்ப்பு ஏற்படுகிறது. தன்னைத் தேடி வரும் அவரை அலைய விட்டு வெறுப்பேற்றுகிறார் காஜல். காஜலின் விரல் தீண்டலில் ராம்சரண் பூர்வஜென்மக் காதலால் சிலிர்ப்படைகிறார்.

முன் ஜென்மக் காதலில் அவர்களைச் சேரவிடாமல் தடுத்த வில்லன் தேவ்கில், இப்போதும் அதே உதயகிரி ராஜவம்சத்தில் பிறந்து, மீண்டும் அதே வேலையைச் செய்கிறார். காஜலின் தந்தையைக் கொன்று, அப்பழியை ராம்சரண்மீது போடுகிறார். அதை நம்பும் காஜல், ராம்சரணை வெறுக்கிறார். சதிகளை முறியடித்து, ராம் சரண் காதலில் எப்படி வெற்றி அடைகிறார் என்பதுதான் கதை.

பூர்வ ஜென்மப் பகுதிகள் பிரமிப்பின் உச்சம் எனலாம். அதிலும் அந்த மலைப் பாலத்தில், ஷேர்கான் படைகளுடன் ராம்சரணின் வாள்வீச்சு சிலிர்ப்பூட்டுகிறது. இயக்குநர் எஸ்.எஸ்.ராஜமௌலி சரித்திர காலத்திற்கே நம்மைக் கொண்டு சென்றுவிடுகிறார்.

– **கௌதம நீலாம்பரன்**

“முடிவை ஊகிக்க முடியாத வரலாறு” என்றேன்.

“உன்னுடைய கதை சொல்லும் திறமை எனக்கு இல்லை” என்று அவனைப் புகழ்ந்தேன்.

“அப்படிச் சொல்லாதே.. கதை எழுத உனக்குத் திறமை; சொல்ல எனக்குத் திறமை. நடந்தவற்றைக் கூட்டிக் குறைத்துச் சொல்லாவிடில் கதை சுவையாக இருக்காது. ஆனால் நான் பால் கலக்காத கிரீன் டீ தருகிறேன்” என்றான்.

“எப்படியோ, தூக்கம் வருவதற்குள் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லி விடு” என்றேன்.

“ஆமாம். உனக்கும் களைப்பு அதிகமாக இருக்கும். உன் கண்கள் சொல்கின்றன. நாளைக் காலை கண்டி நடனம் பார்க்க வேண்டும்; புத்தர் சிலை இருக்குமிடம் செல்ல வேண்டும். ஊர் சுற்றி இயற்கைக் காட்சிகளை உனக்குக் காட்ட வேண்டும். இது நான் வசித்த ஊரப்பா!

இந்தியாவின் மிக உயரிய விருதான தாதா சாகேப் பால்கே விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழ் திரைப்பட இயக்குனர் சிகரம், பத்மஸ்ரீ.கே. பாலசந்தர் அவர்களுக்கு ஓவியத்தை பரிசளித்து வாழ்த்து பெற்றார் ஓவியர் தமிழ் (நமது குங்குமச்சிமிழில் வெளியாகும் கதைகளுக்குப் படம் வரைகிற ஓவியர் இவர்) உடன் பத்திரிகையாளர் மேஜர்தாசன்.

மேலும் சுனிதா நன்றாக உறங்குகிறாள். பாதி இரவுக்கு மேல் அவள் உறக்கம் கலைந்து, புரண்டு படுப்பாள். அருகே என்னைத் தேடுவாள். அன்று நடந்தவை, நடக்க வேண்டியவை எல்லாவற்றையும் விவாதிக்கத் தொடங்குவாள். ‘என் அழகே எனக்கு எதிரியாக இருக்கிறது. புத்தர் பிரான் வடிவழகை ஏன் எனக்குக் கொடுத்தான்? என் அம்மா இருந்தால் எனக்குப் பாதுகாவலாக இருந்திருப்பாள்’ என்று அடிக்கடி வருத்தப்படுவாள்.

ஒருநாள் கேட்டாள்;‘காசி! நீயும் என் அழகைக் கண்டுதானே என்னை ஏற்றாய்? உன் முதலாளிதான் என் தந்தை என்று பல ஆண்டுகள் நான் நினைத்திருந்தேன். என் தாயிடம் அவர் தவறாக நடக்க முயன்றாராமே, அது உண்மையா? என் அப்பாவையும் அவர் கொன்று விட்டாராமே? உண்மையைச் சொல்லு காசி! என் அம்மாவைக் கொன்ற அவரைச் சும்மா விடமாட்டேன்.’

அவள் இனிய உதடுகளை வலக்கையால் நான் பொத்தினேன். 'இன்னொரு முறை அப்படிச் சொல்லாதே. உன் தாயின் உதவியுடன் அவரைப் பழிதீர்க்க நாகராஜன் முயன்றது. உன்னை விட உன் தாய் கொள்ளை அழகு. தேவதேவர்களே உன் தாயின் அழகில் மயங்கி விடுவார்களாம்..' என்று கூறும் போது 'நீ என் அம்மாவைப் பார்த்திருக்கிறாயா?' குறுக்குக் கேள்வி கேட்டாள்.

'இல்லை. நடந்தவற்றைக் கேள்விப்பட்டிருக்கிறேன். பிறகு தான் நான் சர்ப்பவெதாவிடம் வேலைக்குச் சேர்ந்தேன். அழகில் நீ அக்கினிக் குஞ்சாகத் தணல் விட்டிருக்கும் பருவத்தில்தான் நான் பஞ்சாக, என் முதலாளி விஷராஜாவிடம் வேலையில் அமர்ந்தேன். சிகை அலங்காரம் செய்வதில் நான் நிபுணன். என் பேச்சு, பணிவு, சிங்கள மொழியை மிக எளிதில் கற்றறிந்து சரளமாகப் பேசுவது எல்லோம் அவருக்கு என் மீது நம்பிக்கையை வளர்த்தது. சுனிதா! உன் அழகுக்கு அடிமையானேன். அதனால்தான் சிகை அலங்காரத் தொழிலகத்தில் தொடர்ந்து பணியாற்றினேன்' என்றேன்.

'ஓ!' என்று கூறி என் பக்கம் திரும்பி என்னை அணைத்துக் கொண்ட அவள், 'என் முதல் அடிமை நீதானா? என் அழகுக்காகத் தான் காதலித்தாயா? அதனால்தான் நான் வருத்தப்படுகிறேன். அழகு எனக்கு முதல் எதிரி...' என்றாள்.

நான் திடுக்கிட்டேன். அவள் கரத்தை மெல்ல விலக்கினேன். 'உன் அழகுக்கு மட்டும் நான் அடிமையானேனா? உன் அழகை மட்டும் ஆராதனை செய்தேனா? உன் ஆழ்மனத்தில் எனக்கு இடமில்லையா? என்னைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அன்பைவிடக் காம உணர்வு என்னிடம் விஞ்சியிருப்பதை நான் உணர்வேன். 'உன்னை நீ அறிந்து கொள்' என்ற வேதாந்த தத்துவம் வேறெதுவுமில்லை. உன் குணம் என்னவென்பது உனக்குத் தெரியாமல் வேறு யாருக்குத் தெரியும்? சுனிதாவைக் கண்டவுடன் எனக்குக் காம எண்ணம் முதலில் துளிர்த்தது என்பது எனக்கே தெரியும். ஆனால் அதைவிட அவள் மனத்தின் எதிரொலி அவள் மீது அன்பை வளர்த்தது. தூய பாசம் அவளிடம் ஏற்பட்டது. அதனால்தான் அவளுக்கு அடிமையானேன். நிறைய் சொல்ல வேண்டியிருக்கிறது.

சுனிதாவிடம் நான் கொண்டிருந்த காதல் என் முதலாளிக்குப் புரிந்துவிட்டது. என் காதலை அவர் ஏற்கவில்லை. சுயநலம் அவரிடமிருந்து

குங் பு பண்டா–2 படத்தில் நடித்த நடிகை ஏஞ்சலினா ஜோலிக்கு (வயது 34) 9, 7, 6, 4 வயதுகளிலும் இரண்டு வயதில் இரட்டைக் குழந்தைகளும் உள்ளன. அம்மணி பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழத் திட்டமிட்டுவிட்டாரோ!.

– க.ரவீந்திரன்

என்று சொல்லமாட்டேன். ஆனால், என் அருமை சுனிதா சொல்வாள். ‘தந்தையாக என்னை வளர்த்த அவருடைய போக்கில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. சமீபகாலமாக எனக்குப் பய உணர்வு ஏற்படுகிறது. காசி, என்னை நீ உயிருக்குயிராய் நேசிப்பது சத்தியமானால், நாம் இங்கிருந்து எங்காவது கண்காணாமல் போய்விடுவோம்’ என்றாள்.

எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. அன்றே என் முதலாளி அபயசிங்கா முன்பு சொன்ன வார்த்தைகள் என் மனத்தில் கடுமையாக ஒலித்தன.

‘காசி! சுனிதாவின் மீது உனக்கும் காதல் ஏற்பட்டு விட்டது. காமத்துடன் கூடிய அந்தக் காதலை மறந்துவிடு. தமிழர்கள் அடக்கமானவர்கள். உழைப்பாளிகள், உண்மையானவர்கள் என்று நான் அறிந்தேன். நீ சகல விதத்திலும் என் கலையைக் கற்று என் இடத்தில் அமர்வதற்கேற்றவன் என்று நான் முடிவு செய்துவிட்டேன். நான் வாழப்போவது இரண்டு வருடங்களோ, மூன்று வருடங்களோ? ஆனால் மாணிக்கராஜா என்ற நாகராஜனின் சீற்றம் நாளுக்கு நாள் அதிகமாகிறது. அவன் இனத்தையே பூண்டோடு நான் அழிப்பதால் அவனுக்கு ஏற்பட்டுள்ள ஆத்திரம் கொஞ்ச நஞ்சமன்று. கொடிய விஷமுள்ள அவனுடைய சீடர்கள், உறவினர்கள் கடித்த எந்த மனிதனும் இறந்து போவதில்லை. அதற்கு மாறாக என் மந்திர சக்தியால் கடித்த நாகங்கள் கொல்லப்பட்டு உயிரிழக்கின்றன என்ற ஆத்திரம் உச்சநிலையை அடைந்துவிட்டது.

எல்லோருக்கும் விஷ முறிவு வைத்தியம் செய்யும் என்னைப் பாதுகாக்க நான் வாரிசை உருவாக்க வேண்டாமா? தேடினேன். தேடிக் கொண்டே இருந்தேன். நீ கிடைத்தாய். மிகக் கவனத்துடன் உன்னைக் கண்காணித்து வந்தேன். உன்னை எனக்குப் பிடித்து விட்டது. காசி! சுனிதாவை மறந்துவிடு. கல்லூரியில் படிப்பதற்காக அவளை நான் கொழும்புக்கு அனுப்பப் போகிறேன். நீ பூரண பிரம்மசர்யத்தை நாற்பது நாள்கள் கடைப்பிடித்து தூய்மையான மனம் உனக்கிருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திய பிறகு ஒரு பௌர்ணமி நாளன்று உன்னை 'சர்ப்ப வெதா'வாக்க முடிவு செய்திருக்கிறேன். காசி! என் ஆவலை, எண்ணத்தை நிறைவேற்றுவாயா?"

காசி சொல்லி வரும்போது நான் குறுக்கிட்டேன். கண்டி நடனத்தில் எழுப்பப்படும் பக்கவாத்திய ஓசைகள் காற்றில் மிதந்து வந்தன. குளிர் நடுங்கத் தொடங்கிவிட்டது என்றாலும் எனக்கு வியர்த்து விட்டது. காசி சொல்ல வேண்டியவை இன்னும் குறைவு என்பதும் புரிந்துவிட்டது. அவனுடைய முதலாளி அபயசிங்க வெதா அவன் காதலைக் கண்டுபிடித்துவிட்டார். காதலுக்குக் குறுக்கே நிற்கப் போகிறார். சுனிதாவை மறக்க வேண்டுமாம். அவருடைய அடுத்த வாரிசாக காசியை நியமிக்கப் போகிறாராம். அதற்குப் பிரதிபலனாக சுனிதாவை அவன் மறக்க வேண்டுமாம். பூரண பிரம்மசர்யத்தை நாற்பது நாள்கள் கடைப்பிடித்து, தூய்மையான மனம் காசிக்கு இருக்கிறதா என்பதைப் பரீட்சிக்கப் போகிறாராம். ஒரு பௌர்ணமி அன்று காசியை 'சர்ப்பவெதா'வாக்க முடிவு செய்திருக்கிறாராம். காதலைத் துறந்து விஷ மந்திரம் அறிந்த சர்ப்ப வெதாவாகப் போகிறாரா?'

நான் சிரித்துக் கொண்டேன். முடிவுதான் தெரிந்து விட்டதே. சுனிதாவுடன் காசி இப்போது வாழ்கிறான். மிக நேசமுடன் வாழ்கிறான். அபயசிங்க வெதாவின் எண்ணம் நிறைவேறவில்லை. அந்த முடிவு எப்படி ஏற்பட்டது? உண்மைச் சம்பவமாயிருந்தாலும் காசியின் கற்பனையாக இருந்தாலும் முடிவு எப்படி நேர்ந்தது என்பதை அறிவதற்கு நான் மிக ஆவல் கொண்டேன்.

"காசி முடிவை உடனே சொல்லிவிடு. உன் முதலாளி அபயசிங்காவிடமிருந்து விஷமுறிவு மந்திரம் கற்று 'சர்ப்பவெதா' வாக மாறினாயா அல்லது சுனிதாவை மணந்தாயா? எனக்கு ஒரு சந்தேகம். உன் முதலாளி பற்றிய உண்மையைச் சொல்லிவிடு. விரிவாக இல்லாவிடினும் கோடிட்டுக்காட்டிவிடு" என்றேன். "நீ சர்ப்பவெதாவாக ஆகியிருக்க

முடியாது. சர்ப்பவெதாவாக ஆக பிரம்மச்சர்யத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். சுனிதாவுடன் இருந்து கொண்டு எப்படி நீ பிரம்மசாரியாக இருக்க முடியும்? நீ சொல்லாமலே முடிவு தெரிந்து விட்டது?" என்று அவனைக் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் குடைந்தெடுத்தேன். அறையின் உள்ளே இருந்து சுனிதாவின் குரல் கேட்டது: காசி! எங்கே போய்விட்டாய்?

"சீடராக ஏற்க விரும்பிய அபயசிங்காவின் சிஷ்யராக மாறினாயா? சீக்கிரம் சொல். உன் சுனிதா உறக்கம் முடித்துத் திரும்பிப்படுத்து அருகே உன்னைத் தேடித் துழாவுவதற்குள் சொல்லி முடித்து விடு"

"நான் விழித்துக் கொண்டு உன்னைத் தேடுகிறேன். உன் குரல் கேட்கிறது. ஆனால், நீ எங்கே இருக்கிறாய்? எப்போது எழுந்து வெளியே போனாய், வா, விரைந்து வா. குளிர் நடுங்குகிறது" என்று கூவினாள் அவள்.

(பெரிய நாவலாக எழுதாமல், பெருங்கதையாக எழுத முனைந்த நான் மேலும் வளர்க்க விரும்பவில்லை. 'நாகராஜன் சபதம்' கதையை முடித்து விட வேண்டும் என்று மிக வேகமாக சுருக்கமாகவே காசியின் வாய்மொழியாகவே கூறி வந்தேன். கதையின் 'கிளைமேக்ஸ்' என்பார்களே. உச்சகட்டநிலையில் சுனிதா விழித்துக் கொண்டுவிட்டாள். அவள் கூறியவற்றைக் கூறி, நாமும் கதையை முடிப்போம். நானிலம் முற்றும் நலனுடன் வாழ்க! ஆ - விக்கிரமன்.)

4

என் நண்பன் காசி பொதுவாக யாருக்கும் பயப்பட மாட்டான். ஆனால், சுனிதாவின் குரலைக் கேட்டவுடனேயே நடுங்கினான்.

"சுனிதா விழித்துக் கொண்டு விட்டாள். என்னைக் காணாமல் கோபமடைவாள். அங்கிருந்தே கூவுவாள். எங்கே இருக்கிறோம். சூழ்நிலை என்ன என்று நினைக்கமாட்டாள். சில சமயங்களில் அவள் எனக்குப் பாரம் தான்!" என்று சலித்துக் கொண்டான்.

காசி உள்ளே விரைந்தான். சிங்கள மொழியில் அவன் மெல்லப் பேசுவதும் அவன் சமாதானப் பேச்சை ஏற்காமல் அவள் உரக்கப் பேசுவதும் கேட்டது.

காசி வெளியே வந்தான். அவன் முகம் வாடியிருந்தது. என்ன நடந்தது? தொங்கிய முகத்துடன் வருகிறாயே!” என்றேன்.

எல்லாவற்றையும் உன் நண்பரிடம் சொல்லிவிட்டாயா? என அவள் கோபமாகக் கேட்டாள்.

“நடந்த கதையை என்னிடம் சொல்வது அவளுக்குப் பிடிக்க வில்லையா? உனக்கும் எனக்கும் உள்ள நட்பின் பலத்தை அவள் அறியவில்லையா?” என்று நான் கேட்டேன்.

“இல்லை இல்லை. உன்னிடம் எதையும் மறைக்கச் சொல்லவில்லை, ஆனால், உள்ளது உள்ளபடியே சொல்லாதே என்று கேட்டுக் கொள்கிறாள்” என்றான் காசி.

எனக்குப் புரியவில்லை. “உள்ளது உள்ளபடி சொல்லாமல் கொஞ்சம் கூடுதலாக அல்லது குறைத்துத்தானே இதுவரை சொல்கிறாய்? உன் கற்பனையின் அளவு எவ்வளவு என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லையே காசி!” என்றேன்.

“வா, உள்ளே போவோம். இனி இங்கிருந்து பேச வேண்டாம். அவள் எதிரேயே பேசுவோம்” என்றான் காசி.

சுனிதா மீண்டும் உறக்கத்திலாழ்ந்தாள். நான் அவள் எதிரே நாற்காலியில் அமர்ந்தேன். காசி அவள் தலைப்பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு விலகியிருந்த போர்வையை அவள் மீது மெல்லப்

குறையைத் தகுதியாக மாற்றிக் கொண்டவர்.

புகழ்பெற்ற நகைச்சுவை நடிகரான சார்லி சாப்ளின் ‘சவக் சவக்’ கென்று நடப்பதைப் படங்களில் பார்த்திருக்கிறோம். கேமரா முன்பு மட்டும்தான் அவர் இப்படி வேண்டுமென்றே தத்துப்பித்து நடைபோடுகிறார் என்று நினைக்க வேண்டாம். அவரது இயல்பான நடையே அதுதான்!

சாப்ளினின் கால்கள் வளைந்து போய்விட்டன. கதாநாயகனாகவும், வில்லனாகவும் நடிக்கத் தகுதி இல்லாதவர் என்று தள்ளப்பட்ட சாப்ளின், தன் குறையை ஒரு பெரிய தகுதியாகப் பாவித்து வளைந்த கால்களால் சற்று மிகைப்படுத்தி வைத்து நடத்து, உலகின் கை தேர்ந்த நகைச்சுவை நடிகர்களுள் ஒருவராக உயர்ந்தார்.

- முக்கிமலை நஞ்சன்

போர்த்திவிட்டு அவளையே சற்று நேரம் பார்த்தான்.

உலகத்தைப் படைத்தவரை நாம் கண்டிக்க வேண்டும். பாரபட்சமுள்ளவர். சில வேளைகளில் நமக்குச் சோதனையாக அமைகிறார். சிலரை மிக மிக அழகுடனும் சிலரை அழகு குறைவாகவும் படைக்கிறார். கொள்ளை அழகு என்பார்களே, அதுபோல் இவளிடம் உலகிலுள்ள அழகையெல்லாம் உருட்டித் திரட்டிக் கொடுத்திருக்கிறார். அதனால்தான் நான் தவறு செய்துவிட்டேன். அவளிடம் மயங்கிவிட்டேன்" என்றான் காசி, குரல் தழுதழுக்க.

"அதுதான் தெரிந்த விஷயமாயிற்றே! நீ மயங்கியிராவிடில் வேறு யாராவது அடிமையாகியிருக்கப் போகிறார்கள். காசி! முடிவைச் சீக்கிரம் சொல்லிவிடு. இன்னும் சிறிது நேரத்தில் பொழுது விடிந்து விடும். பிறகு மனம் விட்டுப் பேச முடியாது" என்றேன்.

"கண்டியில் – இப்படித்தான் ஒருநாள் பொழுது விடிந்தது. விடுமுறைக்கு அவள் இங்கு வந்திருந்தாள். என் குருநாதர் முதலாளி அவளைக் கொழும்புக்கு மேல்படிப்பிற்கு அனுப்பி வைத்தார். இதே புத்தர் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் கலந்து கண்டிக்குச் செல்ல சுனிதா முடிவு செய்திருந்தாள். தன் தந்தை சர்ப்ப வெதாவிற்கும் அதைத் தெரிவித்திருந்தாள். எனக்கும் கடிதம் எழுதியிருந்தாள்."

'அன்புள்ள காசி! இரண்டு நாள்களாக எனக்கு மனசே சரியில்லை. என் தாய் கனவில் வருகிறாள். என் தாயை நான் பார்த்ததில்லை. ஆனால், என் தாயே தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள். கனவிலும் கொள்ளை அழகு. மாணிக்கராஜாவான நாகராஜன் பெயரைச் சொன்னாள். அவளும் நாககன்னிகையாம். சர்ப்பவெதாவைப் பழிதீர்க்கவே என் தாயை அந்த உருவில் அவர் அனுப்பினாராம். மனித ஜன்மமெடுத்து திருமணம் புரிந்து கொண்டு சரியான வேளையை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். என் தந்தையும் தாயும் உன் குருநாதர் கண்களில் படுமாறு குடியிருந்தார்கள். சர்ப்பராஜாவின் திட்டம் நிறைவேறும் தருணம் வந்துவிட்டது. என் தாயின் வாதநோயைத் தீர்க்க எங்கள் வீட்டிற்கு உன் குருநாதர் அடிக்கடி வரத் தொடங்கினார். அவரை எப்படியாவது அழகுக்கு அடிமைப்படுத்துமாறு சர்ப்பராஜா கட்டளையிட்டிருக்கிறார். என்னைக் கருவில் கொண்டிருக்கும் போதும் சர்ப்பவெதா எங்கள் வீட்டிற்கு வருவார். அவர் மனத்தில் சிறு சலனம் ஏற்பட்டது. அவருடைய மந்திர சக்தி மெல்ல மெல்லக் குறையத் தொடங்கியது.

மிக அழுத்தமாக பாறை போலிருந்த சர்ப்பவெதா தன் தவ வலிமையிலிருந்து சரியலானார். ஆனால் எங்கள் வீட்டிற்கு வரும்போது மிகக் கவனமாக இருப்பார். பழிதீர்க்க மாணிக்கராஜா தன்னைப் பின்தொடர்வது அவருக்குத் தெரியும். தன்னிடம் துளிர்விட்ட காம எண்ணத்தை அடக்கிக் கொண்டார். அந்தப் பெண் என் தாய் – மாணிக்கராஜாவின் சூழ்ச்சியை நிறைவேற்ற வந்தவள் என்பதை உணர்ந்து கொண்டார். என் தாயின் சாகசத்திற்கு குருநாதர் சர்ப்பவெதா அடிமைப்படவில்லை. அடிமையாகியிருந்தால் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பே அவர் அத்தியாயம் முற்றுப் பெற்றிருக்கும் என்று சொல்லி நிறுத்தினாள்” என்றான் காசி.

காசி மெல்ல சிரித்துக் கொண்டான்.

“சுனிதா! நீ சொல்வதை நான் ஒப்புக் கொள்கிறேன். என் குருநாதருக்குள்ள மன உறுதி எனக்கில்லை என்பதை நான் உணர்ந்து கொண்டேன். தொடர்ந்து பேசு” என்றான் காசி.

64வது கேன்ஸ் (பிரான்ஸ்) திரைப்பட விழாவில் மல்லிகா ஷெராவத் மெல்லிய கறுப்பு நிற ஆடை அணிந்து உள்ளாடைகள் தெரிய வலம் வந்தார். பிளேபாய் மாடலான கன்டிஸ் பௌச்சரைவிட இவர் கவர்ச்சியாக தோற்றமளித்தாராம்.

– க.ரவீந்திரன்

வைக்கோல் சேதி சொல்கிறது

* **வ**ட அயர்லாந்தில் ஒரு பிடி வைக்கோலை வீட்டு வாசலில் செருகி வைத்திருப்பார்களாம். அது அந்த வீட்டில் 'நாய் இருக்கிறது. ஜாக்கிரதை' என்று எச்சரிப்பதற்காகவாம்.

* **இ**ங்கிலாந்தில் குடியானவன் தன் தொப்பியில் வைக்கோலை செருகியிருந்தால், அவன் வேலையின்றி இருக்கிறானென்றும் வேலை கிடைத்தால் செய்யத் தயாராக இருக்கிறான் என்று அறிந்து கொள்ளலாம்.

* **ஸ்**காட்லாந்து நாட்டில் ஒருவரது வீட்டுக் கதவின் இடுக்கில் வைக்கோல் செருகப்பட்டிருப்பின் வீட்டுத் தலைவன் மனைவியை அடிக்கும் கெட்ட குணம் உடையவன் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

- முக்கிமலை நஞ்சன்

"சர்ப்பவெதாவை மயக்க முடியவில்லை என்பதை அறிந்து கொண்ட மாணிக்கராஜா என் தாயைப் பலமுறை எச்சரித்தார். நல்லவாய்ப்புகளை நழுவவிட்டதற்காகக் கடிந்து கொண்டார். அதனால் சீற்றத்துடன் என் தாயைச் சீண்டினார். தாயைக் காப்பாற்ற சர்ப்பவெதா வரவில்லை. தன் மனைவியைக் காப்பாற்றுமாறு உயிர்ப் பிச்சை கேட்டு ஓடோடி வந்த என் தந்தையை வழக்கம்போல் பலமாக அடித்து வீழ்த்தினார். ஆனால் தாயைக் காப்பாற்ற முயலவில்லை. அடித்து வீழ்த்தப்பட்ட தந்தையும் மயக்கம் தெளிந்த இரண்டு நாள்களில் மாரடைப்பினால் மாண்டார். நான் அநாதையானேன். உங்கள் முதலாளி சர்ப்பவெதா என்னைக் காப்பாற்றினார். தொட்டில் குழந்தையாக இருந்த என்னை எடுத்து வளர்த்தார். ஒவ்வோர் ஆண்டும் அவர் போஷாக்கினால் என் அழகு கூடியது. சமீபகாலம் வரை அவரை என் உண்மைத் தந்தையாகவே நினைத்திருந்தேன்.

காசி! அவர் சூழ்ச்சி எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்தது. எனக்குத் தாயாக இருப்பார் ஒரு சமயம். என் அந்தரங்கத்தைச் சொல்வேன். கரும் கூந்தலை வாரி விடுவார். வாசனைத் தைலமிட்டுக் குளிப்பாட்டுவார். சமீபகாலம் வரை அவர் மடியில் படுத்தபடியே உறங்கிவிடுவேன்.

சிறிது காலத்திற்கு முன்புதான் எனக்குப் புரிய முடியா அச்சம் ஏற்பட்டது. அவரில்லாத வேளையில் யாரோ என் அருகே வந்து சிரிப்பது போல் தோன்றியது. ஒரு நாள் அவரில்லாத வேளையில் பட்டுப்புடவைகள்

விற்பவர் போல் ஒருவர் வந்தார். முகத்தைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை. ‘புஸ்புஸ்’ என்று வரும் மூச்சு எரிச்சலை ஊட்டியது. ஆனால், விதவிதமாகக் கொண்டுவந்திருந்த பட்டுப்புடவைகள் என்னை மிகவும் கவர்ந்தன.

புடவைகளின் நிறம், தரம் பிடித்திருப்பதை உணர்ந்த அந்தப் பட்டுப்புடவை வியாபாரி, அவற்றை ஒரு மூட்டையாகக் கட்டி என்னிடம் கொடுத்து ‘மகளே! மிக அமைதியாக இவற்றைப் பார்த்து உன் தந்தையிடம் காட்டி, தேர்ந்தெடுத்து வைத்தால் பிறகு ஒருநாள் நான் வந்து பணம் பெற்றுக் கொள்கிறேன்’ என்று கூறிச் சென்றார்.

‘என் அப்பா இருக்கும்போது வாருங்களேன்’ என்று நான் சொன்னேன்.

‘உன் அப்பா எப்போது வருவார் என்று எனக்குத் தெரியாது. அந்தச் சமயம் வருவதற்கு எனக்கு வசதியாக இராது. நான் எப்போது வருவேன் என்று சொல்ல முடியாது. ஆனால் உறுதியாக வருவேன்’ என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

உங்கள் குருநாதர், தந்தை என்று நம்பிய அவர் வீட்டிற்கு வந்தபோது நான் நடந்தவற்றைச் சொன்னேன். அவர் என்னை ஒருமுறை பார்த்தார். புடவைகளைப் பார்த்தார். கையில் எடுத்து முகர்ந்தார். பிறகு அவற்றை எடுத்து வெளியே புதருக்குள் வீசிவிட்டார்.

‘சுனிதா! இவை உனக்கு வேண்டாம். கடை வீதிக்குச் செல்வோம். உனக்குப் பிடித்ததை வாங்கித் தருகிறேன்’ என்றார்.

நிறையப் பட்டுத்துணிகள் வாங்கித் தந்தார். ஆயத்த ஆடைகளை வாங்கித் தந்தார். அவற்றை அணியச் சொல்லி அழகு பார்த்தார். சில வேளைகளில் சிங்கள உடையில் வரும் என்னைப் பாதாதிகேசம் தொடும்போது எனக்குக் கூச்சமாக இருந்தது. வெறுப்பாக இருந்தது. தேள்கள் ஊர்வது போல் இருந்தது. காசி! சொல்லக் கூசுகிறது. வார்த்தை வரவில்லை. அவர் நடவடிக்கைகளைச் சொன்னால் வீண் அபாண்டமாகச் சொல்வதாக நினைப்பாய். ஆக மொத்தம் அவர் பார்வை, நடத்தை பிடிக்கவில்லை.

என்னை நீ விரும்புவதாக அவர் அறிந்தார்.
அதற்காக அவர் சந்தோஷப்பட வேண்டாமா?

தொடர்ச்சி 34-ம் பக்கம்

31-ம் பக்கத் தொடர்ச்சி அவரறிந்த வித்தையை உனக்குக் கற்றுத் தருவதற்காக நீ காலாகாலத்திற்கும் பிரம்மசாரியாக இருக்கவேண்டுமாம். என்ன நியாயம்? காசி! ஒன்று எனக்குப் புரிந்துவிட்டது. விஷ முறிவு வித்தையை உனக்குக் கற்றுக்கொடுத்து விட்டு, தான் ஓய்வுப்பெற்று உலக சுகங்களை அனுபவிக்க முடிவு செய்துவிட்டார். அவர் எதிரி மாணிக்கராஜாவிற்கும் வயதாகி விட்டது. அவருடைய சந்ததியினர் மெல்ல மெல்லக் குறைந்து விட்டனர். உங்கள் குருநாதரைப் பழி தீர்க்கும் நாகராஜனின் சபதம் நிறைவேறாது போலிருக்கிறது. அல்லது அல்லது... காசி! சொல்ல எனக்கு அச்சமாக இருக்கிறது. நம் காதலைப் பிரிப்பதற்கு அவர் செய்யும் சூழ்ச்சியாகக்கூட இருக்கலாம் என்று தோன்றுகிறது.'

அவள் இவ்வாறு சொன்னவுடன் எனக்குக் கோபம் வந்தது.

'என்ன சொல்கிறாய்? நம் காதலைப் பிரிப்பதற்கு அவர் ஏன் சூழ்ச்சி செய்ய வேண்டும்? அதனால் அவருக்கென்ன லாபம்?" என்று கேட்டேன்.

சிரித்தாள். 'ஐயோ காசி! உன்னைப் பெரும் அறிவாளி என்று மெச்சுகிறார்கள். மற்றவர் நடவடிக்கையைப் புரிந்து கொள்ளக்கூடிய சக்தி உனக்கு இல்லையே. அவருடைய விஷ வைத்திய மந்திரத்தை உனக்குக் கற்றுத் தந்து உன்னை அவருடைய வருங்கால சீடராக்கி விடுவதுதானே அவர் எண்ணம்? அதுமட்டுமா... சர்ப்ப இனத்தையே அழித்துவிடுவதுதானே அவரது குறிக்கோள்?'

'ஆமாம். இதில் உறுதியாக இருக்கிறார்'

"மரமண்டை என்று சொன்னால் நீ வருத்தப்படமாட்டாய் அல்லவா?"

"வருத்தப்படமாட்டேன். மகிழ்ச்சியடைவேன். உன்னைக் காதலிக்கும் எண்ணம் அப்படியொரு 'மண்டை' எனக்கிருப்பதால் தானே வந்தது?" என்று சொல்லிவிட்டு நான் சற்று நகர்ந்து கொண்டேன். கையிலகப்பட்டத்தை எடுத்து என்னை அடிக்க அவள் விரைந்து வந்தாள்.

'ஸாரி சுனிதா! விளையாட்டுக்குச் சொன்னேன். மன்னித்துவிடு.'

“மன்னிக்கமுடியாது. உனக்கு ஆயுள் தண்டனை தரப்போகிறேன். உன்னை நான் கல்யாணம் செய்துகொள்ள முடிவு செய்துவிட்டேன்” என்று கூறிப் பெரிதாக நகைத்து, ‘காசி! மிகவும் சீரியஸாக நான் பேசும்போது, சிரித்துப் பேச உனக்கு எப்படித் தோன்றியது? உன்னிடமிருந்து என்னைப் பிரிக்காவிட்டால், நிச்சயம் காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ளும் நிலைக்கு வந்து விடுவாய். பிரம்மச்சர்யம் தவறிவிடும். பிரம்மச்சர்யம் தவறினால் விஷமந்திரம் பலிக்காது. சில நாள்களில் அவர் இறந்துவிட்டால் மாணிக்கராஜாவான நாகராஜனுக்குக் கொண்டாட்டம் தானே?”

‘ஆமாம். நீ சொல்வது சரிதான். அவர் இறந்துவிட்டால் பிரம்மச்சர்யம் தவறி விஷமந்திரம் எனக்கும் பலிக்காது போய்விட்டால் நாகராஜனுக்குத்தானே வெற்றி? நாகராஜன் சபதம் வெற்றியடைந்து விடுமல்லவா? அதனால்தான் நம் காதலைப் பிரிக்கிறார்’ என்றேன்.

அவள் சற்றுநேரம் மௌனமாக இருந்தாள்.

‘காசி! நீ சொல்வதும் சரிதான். நாகராஜன் சபதம் வெற்றி பெறுகிறதோ இல்லையோ அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் நம் காதலை அவர் பிரிக்க முடியாது. காதலைப் பிரிப்பது மற்றொரு முக்கிய காரணத்திற்கு. அதைச் சொல்ல என் நாக்கு கூசுகிறது’ என்றாள். அவள் விழிகளில் நீர் தளும்பியது.

5

கண்டியில், அந்த நள்ளிரவில், அறையில் சுனிதா கூறியவற்றை என்னிடம் காசி ஒரு வரி விடாமல் சொன்னான். எனக்கு வியப்பாக இருந்தது. கதைசொல்வதிலும் கற்பனையாகச் சம்பவங்களை விவரிப்பதிலும் திறமை மிகுந்தவனான காசி சொல்வதை நம்புவதா வேண்டாமா என்று திகைத்தவாறிருந்தேன். இரவின் ஆட்சி முடியும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. உறக்கம் என் விழிகளைத் தழுவத் தொடங்கியது. ‘கண்கள் சொக்கின’ என்பார்களே அதை அனுபவித்தேன். காசியிடமிருந்து முழுக்கதையையும் இல்லை இல்லை– செய்தியையும் கேட்டறிய வேண்டும் என்ற துடிப்பும் மிகுந்திருந்தது. உறக்கத்தின் வழிகாட்டியாகவும்

புகையிலை

புகையிலையின் தாயகம் அமெரிக்கா.

புகையிலையை அவர்கள் போதைக்கும், மருந்துக்கும் பயன்படுத்தினர்.

கொலம்பஸ் அங்கிருந்து புகையிலையை ஸ்பெயினுக்கு கொண்டு வந்தார்.

பிறகு ஐரோப்பிய நாடு முழுவதும் பரவியது.

போர்த்துகீசியர்கள் இந்தியாவுக்கு அறிமுகப்படுத்தினார்கள்.

முதலில் பொடி, பிறகு சுருட்டு அப்புறம் பீடி, அதன்பிறகு சிகரெட்டு என்று வளர்ச்சி மாற்றம் அடைந்துள்ளது.

- முக்கிமலை நஞ்சன்

கட்டியங்காரனாகவும் விளங்கும் 'கொட்டாவி'யைத் தடுக்க என்னால் முடியவில்லை.

"நீங்க போய்க் கொஞ்சமாவது தூங்குங்க... காலையிலே மீதியைத் தொடர்ந்து சொல்கிறேன்" என்று சொல்லி, காசி என்னைப் படுக்கச் சொல்லிவிட்டான்.

காலையில் நான் விழித்து எழுந்திருக்கும்போது பத்து மணிக்கு மேல் ஆகிவிட்டது. அதற்குள் சுனிதாவும் காசியும் குளித்துவிட்டுத் தயாராகிவிட்டார்கள். கண்டி பழமையான நகரம். அழகிய நகரம். நடனக்கலையை வளர்த்த நகரம். மலர்கள் பூத்துக் குலுங்கும் பெரிய நந்தவனம். நந்தவனத்திற்குள் நுழையும்போது வாயிலருகே இருவர் நின்று கொண்டிருந்தனர்.

"காசி" என்று ஒருவன் பெருங்குரல் கொடுத்தான்.

"சுனிதா" என்று மற்றவன் பெருங்குரலில் அழைத்தான்.

"உன்னை எங்கெல்லாம் தேடுவது சுனிதா? புறப்படு, புறப்படு! உன் அப்பா உன்னை உடனே அழைத்து வரச் சொன்னார்" என்றான் ஒருவன்.

"ஏ, காசி! முதலாளி உன்மீது கடுங்கோபமாக இருக்கிறார். சுனிதாவை நீ சந்திக்கக்கூடாது என்று கட்டளையிட்டிருந்தாராமே? அதை ஏன் மீறினாய்? உனக்குக் கடும் தண்டனை காத்திருக்கிறது" என்றான் கோபமாக மற்றொருவன்.

சுனிதா ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அவளை அவர்களிருவரும் பேசவிடவில்லை. முகத்தை ஒரு துணியால் மூடி, அவளை அருகே தயாராக நின்றிருந்த காரில் பலவந்தமாக ஏற்றினார்கள். கார் பறந்தது. காசி திகைத்துச்

செய்வதறியாது நின்று கொண்டிருந்தான். என்னைப் பார்த்து "என் முதலாளி எனக்கு துரோகம் செய்துவிட்டார். சுனிதா கூறியவை உண்மை. பாதகா! சொந்தப் பெண்ணைப் போல் வளர்த்தவளைப் பொண்டாள நினைத்துவிட்டாயே! உன்னை விட்டேனா பார். சார்வாள், மன்னிச்சுக்கோங்கோ. அவசரமாகச் செல்கிறேன். எப்படியும் உங்களைச் சந்திப்பேன். ஜாக்கிரதையாக வண்டிபிடித்து, கொழும்புக்கு வந்து சேருங்கள்" என்று பரபரப்பாகக் கூறிவிட்டு என் மறுமொழிக்குக் காத்திராமல் மற்றொரு டாக்ஸியை ஏற்பாடு செய்து அந்தக் காரைப் பின்தொடர்ந்து விரைந்தான். நான் செய்வதறியாது நின்று கொண்டிருந்தேன். திரைப்படக் காட்சிகள் போல் தோன்றின.

கொழும்பு நகரை அடைந்தேன். சாப்பவெதாவைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நான் சொல்லும் அடையாளத்தைக் கொண்டு விவரம் கூறுவதற்கு அக்கம் பக்கத்தில் யாருமில்லை. காசியை நான் பிறகு பார்க்க முடியவில்லை.

சென்னைக்குப் புறப்படும் விமானத்திற்கு நேரமாகிக் கொண்டிருந்தது. என் பணி முடிந்து தமிழ்நாட்டுக்குத் திரும்பினேன். பிறகு பணிநிமித்தமாக இந்தியா முழுவதும் சுற்றும் பெரும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டது. காலில் சக்கரம் என்பார்களே, அதுபோல என் கதையை விவரிக்க இப்போது இடமும் நேரமுமில்லை. காசி கூறிய அரைகுறைக் கதை என் மனத்தை நெருடிக் கொண்டிருந்தது.

பாம்பரசன் மாணிக்கராஜாவான நாகராஜனும் சர்ப்பங்களுக்குத் தன் மந்திரசக்தியால் பெரும் நடுக்கம் கொடுத்துக் கொண்டிருந்த காசியின் முதலாளி சர்ப்பவெதாவும் என் உயிர் நண்பன் காசியும் என்ன ஆனார்களோ? அவன் அருமைக் காதலி சுனிதாவைக் கல்யாணம் செய்து கொண்டிருப்பானா? என் முகவரி அட்டையை அவனிடம் கொடுத்து வந்திருந்தேனே! கற்பைக் கதையோ உண்மையாக நடந்தவையோ அதற்கு முடிவு கூறாமல் விட்டு விட்டானே. கனவு கலைந்து விழித்து திகைப்பது போல் செய்து விட்டாயே காசி! என்று மனதிற்குள் முணுமுணுத்து மறுகினேன்.

சுனிதா எனும் அழகுச் சிலை அவ்வப்போது என் கண் எதிரே தோன்றினாள். கதைகளில் அழகான பெண்ணை வர்ணிக்கும் போது சுனிதாவை என் கண் முன் நிறுத்திக் கொள்வேன்.

காலம் நமக்காகக் காத்திருப்பதில்லை. எனக்குத் திருமணமாகி

விட்டது. திருமணமான புதிதில் சில இரவுகளில் நான் திடீரென்று சிரிப்பதாக என் இனிய மனைவி கூறுவாள். தனக்குத் தானே ஏதோ பேசிக் கொள்வதாகச் சொல்வாள். சில நாள்கள் வெளியூர் சென்றிருந்தேன். திரும்பி வரும்போது என் மனைவி குறும்புப் பார்வையுடன் என்னை நோக்கினாள்.

"உங்கள் நண்பன் காசி சுனிதாவைக் கல்யாணம் செய்து கொண்டாரா? உங்கள் வர்ணனைப்படி மிக மிக அழகியும் நண்பர் காசியும் நீங்களும் ஒரே அறையில் படுத்து உறங்கினீர்களே, உங்களுக்கு உணர்வு எப்படி இருந்தது? உங்கள் நண்பர் காசியும் கண்டி நகரத்துடன் கதையை நிறுத்தி விட்டாரா? அல்லது நீங்கள் அத்துடன் நிறுத்திவிட்டீர்களா? நீங்கள் எழுதத் தொடங்கிப் பாதியில் நிறுத்திய பல கையெழுத்துப் பிரதிகளைப் போல் இதுவும் ஒன்றா? **'நாகராஜன் சபதம்'** என்று பெயர் கொடுத்து மணிமணியான கையெழுத்தில் எழுதியிருக்கிறீர்கள்... இருபதாண்டுகளுக்கு முன் எழுதியதாக இருந்தாலும் இன்றும் சுவையாக இருக்கிறது. பல பத்திரிகைகளிலிருந்து உங்களிடம் கதை கேட்கிறார்கள். தொடர் கதை ஒன்று வேண்டும் என்று 'கூட்ஸ் ஷெட்' பத்திரிகாலயத்திலிருந்து இரண்டு முறை கடிதம் வந்துவிட்டது. நாகராஜன் சபதத்தை அனுப்புங்களேன். முழுவதும் எழுதி முடித்துத் தர முடியாவிடில் எழுதிய வரை கதையை வெளியிடச் சொல்லுங்கள். கதைத் தொடர் வரும் போதே கதையின் முடிவைக் கற்பனை செய்து விடுங்கள். புது மாதிரியான கதை நம்ப முடியாததாகவும் இருக்கிறது. ஏன் நம்பக்கூடாது என்று நினைக்கவும் தோன்றுகிறது. மனிதருக்கும் கொடிய நாகத்திற்கும் ஏற்பட்ட போராட்டம்! புதிய கற்பனை. புதுமையைத் தானே இப்போது விரும்புகிறார்கள். உடனே எழுதுங்கள். எழுத்துப் பிரதியை நான் மீண்டும் படியெடுத்துத் தரட்டுமா?" என்று மூச்சு விடாமல் பேசினாள் என் உடலின் சரிபாதி.

என்னைக் கேட்காமல் என் பெட்டியைத் திறந்ததற்காக நான் கோபிக்கவில்லை. ஆனால் சிரித்தேன். "என் பழைய பெட்டியைக் குடைந்து ஆராய்ச்சி செய்தாயா? காசி சொன்னதைக் கதை என்று நீ சொல்கிறாயா? கற்பனையில் அவன் கெட்டிக்காரன். ஆனால், அவன் சொன்னது உண்மை" என்றேன்.

"உண்மைக் கதை என்றால் உங்கள் நண்பர் கூறிய கதைக்கு ஒரு முடிவை நீங்களே கற்பனை செய்துவிடுங்கள். 'மெய்யும் பொய்யும்' என்று பெயர் சூட்டுங்கள். அல்லது 'நிழலின் நிழல்' என்று பெயரிடுங்கள். 'அவர் பாதி

நான் பாதி' என்றும் பெயரிடலாம். அப்படியும் இல்லாவிட்டால் நான் ஒரு யோசனை சொல்கிறேன். 'கூட்ஸ் ஷெட்' டிற்கு இந்தக் கதையை அனுப்ப வேண்டாம். 'ஓல்டு ஏஜ் கோல்டு ஏஜ்' என்ற பெயரில் ஒரு பத்திரிகை தொடங்கி யுள்ளார்கள். 'அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு. ஆனால் பதினாறு வயதுப் பெண்களும் படிக்கலாம்' என, புதுமையாக விளம்பரம் செய்திருக்கிறார்கள். நீங்கள் பார்க்க வில்லை? நீங்கள் எழுதியவற்றை 'செங்கமலம்' என்ற புனைபெயரில் அப்படியேநான்எழுதி அனுப்பி விடுகிறேன்" என்றாள்.

நான் அதிர்ச்சி யடைந்தேன். என் மனைவியை இதுவரை குடும்பப் படகை ஓட்டும் பட கோட்டி, 'ஆவரேஜ்' பெண்மணி. என்

அமெரிக்காவில் லாஸ் வேகாஸில் உள்ள சஹாரா ஹோட்டலில் 1700 அறைகள் உள்ளன. அமெரிக்காவின் சூதாட்ட விடுதிகளில் தலையாயதாகக் கருதப்பட்ட இது 1952–இல் திறக்கப்பட்டது. தற்சமயம் புதிய விடுதிகள் இந்த நகரில் திறக்கப்பட்டுவிட்டதால் இதன் வணிகம் குறைந்து கடந்த மே 16–இல் மூடப்பட்டது.

– க.ரவீந்திரன்

இலக்கிய வேகத்துக்கு ஈடு கொடுக்கமாட்டாள் என்று மட்டுமே நினைத்திருந்தேன். இவ்வளவு கற்பனையும், திறமையும் அவளிடம் மறைந்திருப்பதை நான் அறிந்து கொள்ளவில்லை.

நான் சிறிது நேரம் மௌனமாயிருந்தேன். என் சிந்தனைத் தேர் (பழைய உவமை: 'ஜெட்' என்று கூறலாம்) மிக வேகமாகச் சஞ்சரித்தது.

ஒரு வாரம் கழித்து அலுவலகத்திலிருந்து நான் வந்தவுடன் என் துணைவி கடிதம் ஒன்றை என்னிடம் கொடுத்தாள். 'ஓல்டுஏஜ் கோல்டு ஏஜ்' பத்திரிகை அலுவலகத்திலிருந்து

சபாஷ் சரியான போட்டி

ஒரு திருமணத்தில் கலந்து கொள்ள கிராமத்துக்கு வருகிறார் திரைப்பட நடிகர் ஜே.ஆர்.(ஜெயராம்) அவருடைய தீவிர ரசிகரான ஞானகுரு என்கிற இளைஞன் (ஸ்ரீராம் கார்த்திக்) ஜெயராமின் அன்பைப் பெற எண்ணித் தன் திறமைகளைக் காட்டி அவரை அசத்துகிறார். முதலில்எரிச்சலடைந்தாலும் ஸ்ரீராம் கார்த்திக்கின் மிமிக்ரி திறமை கண்டு வியக்கும் ஜெயராம், அவரை 'நீ சென்னையில் என்னை வந்து சந்தி. உனக்கு சினிமா சான்ஸ் வாங்கித் தருகிறேன். நீ பெரிய ஆளாகிவிடலாம்' என்று கூறிவிட்டுப் போகிறார்.

இதை உண்மையென நம்பும் ஸ்ரீராம் கார்த்திக், சென்னைக்கு வருகிறார். ஆனால், அவருக்கு நேரும் அனுபவங்கள் வேறு விதமாக அமைகின்றன. ஜெயராமிடம் அவமானப்படுவதுதான் மிச்சம் என்கிற நிலை. வெற்றி காணாமல் ஊர் திரும்புவதில்லை என்கிற உறுதியுடன் முயன்று கொண்டிருக்கும் ஸ்ரீராமுக்கு எதிர்பாராத விதமாக ஒரு டி.வி.ஷோவில் கலந்து, மிமிக்ரி திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பு கிடைக்கிறது. ஓரளவு அவர் பாப்புலராகவும் ஆகிறார். ஆனால், அதன் இறுதிச் சுற்றில் வெற்றி பெற்றால்தான் சினிமா வாய்ப்புகள் கிட்டும் என்கிற நிலை.

கடிதம் வந்திருந்தது.

'அம்மணி! வணக்கம். நீங்கள் அனுப்பிய **'நாகராஜன் சபதம்'** *எழுத்துப் பிரதியைப் படித்தோம். நீங்கள் கதையை முடிக்கவில்லை. படித்தவரை மிகச் சுவையாக, விறுவிறுப்புடன் செல்கிறது. அடுத்த இதழிலிருந்து நாகராஜன் சபதம் கதையைத் தொடராகத் தொடங்குகிறோம். விரைவில் கதையின் முடிவுப் பகுதியை முடித்துக் கொடுங்கள். கதையைப் படித்தவுடனே எங்களுக்கு ஓர் எண்ணம் உதித்தது. காசியின் நண்பர் என்று கதையில் வரும் இடங்கள் அனைத்திலும் கதை சொல்பவர் உங்கள் கணவராகத்தான் இருக்க வேண்டும். அவர் எப்போதோ கூறியவற்றை மிக அற்புதமாக எழுதிவிட்டீர்களே! அவரிடமே முடிவைக் கேளுங்கள். 'மனைவி பாதி, கணவர் பாதி' என்று விளம்பரப்படுத்தி விடுகிறோம். விரைவில் உங்கள் பதிலை எதிர்நோக்குகிறோம். இப்படிக்கு 'ஓல்டுஎஜ் கோல்டுஎஜ்' நிர்வாக ஆசிரியையின் சார்பாக சப்ஜூனியர் எடிட்டருக்காக செயலாளர்'*

விமர்சனம்

அந்த நிகழ்ச்சிக்கு நடுவராக ஜெயராம் வருகிறார் என்றதும் ஸ்ரீராம் மனமுடைந்து போகிறார்.

ஜெயராம் அந்த நடுவர் பொறுப்பில் சரியாக நடந்துகொள்கிறாரா இல்லையா? நிஜமாகவே அவர் புதுமுகங்களைக் கண்டு பொறாமைப் படுபவரா? என்பதையெல்லாம் கலகலப்பான நகைச்சுவைக் காட்சிகளில் விவரிக்கிறார் இயக்குநர் வேணு அரவிந்த்.

ரசிகனுக்கு சினிமா ஆசை வரலாம். ஆனால், சொந்தத் திறமை இருந்தால் மட்டுமே முன்னேற முடியும் என்பதை உணர்த்தும் படம்.

– கௌதம நீலாம்பரன்

நான் என் மனைவியைப் பார்த்தேன். “செங்கமலம் என்ற புனைபெயருக்குப் பதிலாக ‘சோத்துக்கத்தாழைச் சுந்தரி’ என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கலாமே!” என்றேன்.

“நான் செய்தது உங்களுக்குப் பிடிக்கவில்லையா? கோபமா?” என்று கொஞ்சினாள், செங்கமலம் என்ற புனைபெயரை புதிதாக ஏற்றுக் கொண்டுள்ள என் வாழ்க்கைத் துணைவி. அவளுடைய பெற்றோர் இட்ட பெயர் பிரகத்குஜாம்பாள்.

“இல்லைடா! உன் துணிவை மெச்சினேன். கதையை எப்படி முடிப்பது? ‘பொன்னியின் செல்வன்’ கதையைப் பிரமாதமாக முடித்தபின் பேராசிரியர் ‘கல்கி’ முடிவுரை ஒன்று எழுதினார். கதாபாத்திரங்கள் என்ன ஆனார்கள் என்பதைப் பற்றிக் கேள்வி கேட்கும் வாசகர்களுக்கு ஒரு யோசனை கூறினாரே, பிற்காலத்தில் யாராவது ஒருவர் எழுதி முடிக்கட்டும் என்று. அதுபோல் காசி சொன்ன கதையின் முடிவை வாசகர்களின் கற்பனைக்கு விட்டுவிடுமாறு அறிவிப்பை வெளியிட்டு

எழுதச் சொல்லலாம்” என்றேன்.

இரவெல்லாம் சிந்தித்தேன். மறுநாள் சொன்னேன். “பிரகதி என்ற செங்கமலம் அவர்களே!” என்றழைத்துப் பேச்சைத் தொடங்கினேன். “இல்லை, இல்லை சோத்துக்கத்தாழைச் சுந்தரி என்றே அழையுங்கள்” என்றாள்.

“பத்திரிகை வெளியிடும் அந்த அறிவிப்பைப் பார்த்த காசியே முடிவைக் கூறலாம். காசி உயிருடன் இருப்பான் என உறுதியாக நம்புகிறேன். அவன் நிறையப் பத்திரிகைகள் படிப்பான். இந்தக் கதையையும் படிப்பான். உடனே கதையை முடித்து விடுவான்” என்றேன்.

‘ஓல்டுஏஜ் கோல்டு ஏஜ்’ பத்திரிகை அப்படி ஒன்றும் பிரபலமாகவில்லையே. பெரிய பெரிய போஸ்டர்களை அடித்து வெள்ளைச் சுவரை வீணாக்குகிறார்கள். உங்கள் நண்பர் காசி அந்தப் பத்திரிகையைப் படிப்பார் என எப்படி நம்புவது?” என்றாள் என் மனைவி.

“பத்திரிகையை யார் வாங்குகிறார்களோ இல்லையோ, தமிழ்நாட்டில் வாடகை நூலகங்கள், லெண்டிங் லைப்ரரிகளில் வாங்குவார்கள். உங்கள் நண்பர் காசிக்கும் வயதாகியிருக்குமல்லவா? போது போக வேண்டுமே! நிறையப் பத்திரிகைகள் படிப்பார்” என்றாள்.

என் மனைவியின் பெயரில் நான் எழுதிய கதை வாராவாரம் வெளிவந்து கொண்டிருந்தது. பலர் படித்திருக்கலாம். பத்திரிகை ஆசிரியர் கூற்றுப்படி பல்லாயிரக்கணக்கானவர் படித்துக் கொண்டிருப்பார்கள். பத்திரிகைகளில் ‘சப் ஜூனியர் எடிட்டரின் உதவியாளர்’ அவ்வப்போது வீட்டிற்குத் தொலைபேசியில் என் மனைவியை அழைத்து அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று ஆவலுடன் கேட்பார், அந்தப் பெண்மணி. நான் எழுதி வைத்திருந்த எழுத்துப் பிரதியிலிருந்து அடுத்து வருவதை என் மனைவி அவரிடம் கூறுவாள். “கதையின் ‘சஸ்பென்ஸை’க் கூறக்கூடாது. என்பதற்காகச் சொல்கிறேன்” என்று ரீல் விடுவாள். கொஞ்சம் ‘பந்தாவும்’ செய்து கொள்வாள்.

கண்டி நகரத்தில் காசி சொன்னவரை நான் எழுதியிருந்த கட்டம் பத்திரிகையில் நெருங்கியது. ‘கதையை முடிப்பவர்களுக்குத் தக்க சன்மானம் தரப்படும்’ என்ற ‘சப்ஜூனியர் எடிட்டர்’ ஓர் அறிவிப்பை வெளியிட்டார். பத்திரிகை விற்பனை உத்தியாக இருக்கலாம்.

எவ்வளவு பேர் படிக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வதற்காகவும் இருக்கலாம்.

வாசகர்கள் எப்படியெல்லாம் கருத்தை எழுதுகிறார்கள் என்று பார்க்க எனக்கு ஆவல். அறிவிப்பு வந்து பல நாள்கள் ஆகியும் தகவலில்லை. யாரும் கடிதம் எழுதவில்லை என்று தகவல். ஒரு நாள் யாரோ வாசல் கதவைத் தட்டும் ஓசை கேட்டது. பொதுவாக 'காலிங் பெல்லை' அடிப்பதுதான் வழக்கம். கதவைத் தட்டுவது யாராயிருக்கும் என்ற எதிர்பார்ப்புடன் கதவைத் திறக்குமாறு மனைவியிடம் சொன்னேன்.

"வணக்கம்மா" என்ற குரல் கேட்டது.

நான் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டேன். எப்போதோ கேட்ட குரல், பழகிய குரல் போலவே இருந்தது.

"இதுதானே கதாசிரியை செங்கமலத்தாள் வீடு?" என்ற குரல் மீண்டும் கேட்டது. ரொம்பவும் மரியாதை இருந்தது. 'தெற்கத்தி பாஷை' கலந்திருந்தது.

"ஆமாம். நீங்க யாரு?" என்று மனைவி கேட்டது காதில் விழுந்தது.

"நான்தாங்க காசி" என்ற குரல் தெளிவாகக் கேட்டவுடன், நான் பரபரப்புடன் எழுந்து வாசலுக்கு வந்தேன்.

நான் திகைத்தேன். திடுக்கிட்டேன். கண்களைக் கசக்கிக் கொண்டேன். திக்பிரமை பிடித்தவன் போலானேன்.

"யார் யார்?" என் வாய் குழறியது.

நான் அப்படியே அசைவின்றி நிற்பதைக் கண்ட என் மனைவி என் தோளைத் தொட்டு "என்ன... என்ன ஆச்சு உங்களுக்கு? இப்படி திக்பிரமை பிடித்தவர் போல் நின்றுவிட்டீர்கள்? இவர் யார்?" என்று கேள்வி மேல் கேள்வி கேட்டது எனக்கு நன்றாகக் காதில் விழுகிறது.

காசிதான். அதே காசிதான். கடைசியாக கண்டியில் சந்தித்த அதே காசிதான்.

"என்ன சார்வாள்...! அப்படியே திகைத்து விட்டீர்களே! நான்தான்

உங்கள் உயிர் நண்பன் காசி... மாஜி நண்பனில்லை” என அருகே வந்து சொன்ன பிறகு தான் நான் சுயநினைவை அடைந்தேன்.

காசியின் கரங்களைப் பிடித்துக் கொண்டு “காசி, காசி! மன்னித்துவிடப்பா, அடையாளம் கண்டுகொள்ளச் சற்று தயங்கினேன். உன்னை நேரே சந்திப்போமா என்ற கவலை எனக்கு. பல ஆண்டுகள் கழித்துச் சந்திக்கிறேன்” என்று கூறி அசடு வழிந்தேன். என் மனைவி புரிந்து கொண்டு விட்டாள்.

பிறகு இராஜ உபசாரம். நாற்காலியை இழுத்துப் போட்டாள். இதுவரை போடாத மின்விசிறியைப் போட்டாள். மறந்து போய் டியூப் லைட் சுவிட்சைப் போட்டாள். சாப்பிடச் சொல்லி உபசரணை

கேன்ஸ் (பிரான்ஸ்) திரைப்பட விழாவில் ராணி முகர்ஜி புடவையை இப்படி வித்தியாசமாக அணிந்து கொண்டு வலம் வந்தார். இவரோடு இவரது நண்பர்கள் கரன் ஜோகர் மற்றும் சபயாட்சி முகர்ஜியும் வந்தனர்.

– க.ரவீந்திரன்

செய்வதா என்று மனைவியின் பார்வையிலேயே நான் புரிந்து கொண்டேன்.

காசி சொன்னதை அப்படியே எழுதுகிறேன். ஏனென்றால் காசியின் விருப்பம் அது.

"பத்திரிகையில் கதையைப் படித்தேன் சார்வாள்! யாரோ பெண் பிள்ளை பெயரில் கதை வெளிவந்தாலும் நீங்கள்தான் எழுதியிருக்க வேண்டும் அல்லது எழுதச் சொல்லியிருக்க வேண்டும் என்று உறுதியாக நான் தெரிந்து கொண்டேன். கண்டியில் அன்று உங்களைப் பிரிந்த பிறகு நான் கொழும்பை அடைந்தேன். என் அன்புக்குரிய சுனிதாவை எங்கே மறைத்து வைத்திருப்பார்கள் என்று அலைந்தேன். என் முதலாளியின் தந்திரங்கள், போக்கு எனக்குத் தெரியாதா?

கடைசியாக நான் சுனிதாவைக் கண்டுபிடித்துவிட்டேன். அவள் என்னுடன் சரியாகப் பேசவில்லை. சோகமே உருவாக இருந்தாள். நானும் பேசாமல் அவளையே உற்று நோக்கிக் கொண்டிருந்தேன்.

'காசி, விஷ முறிவு மந்திரம் முழுமையும் நீ கற்றுக் கொண்டு விட்டாயா?' என்று அவள் கேட்டாள். அவள் எப்படி அங்கு வந்தாள்? யார் கடத்தி வந்தார்கள் என்பதைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் இப்படி ஒரு கேள்வியை ஏன் அவள் கேட்டாள்?

"இல்லை. கற்றுத் தருவதாக என் முதலாளி சொல்லியிருந்தார். அதற்கு நிபந்தனை விதித்திருந்தார். உனக்குத் தெரியுமே. உன்னை மறந்துவிட வேண்டுமாம். உன்னைக் காதலிக்கக்கூடாதாம். 'விஷமுறிவு மந்திரமா, என் அருமைக் காதலியா' என்று பெரியதொரு கேள்வி என்னுள் எழுந்தது உண்மைதான்.

நான் தொடர்ந்து பேசினேன். "எதற்காக இப்போது அந்தக் கேள்வியைக் கேட்கிறாய்? நீ ஏன் சோகமாய் இருக்கிறாய்? உன்னைக் கடத்தி வந்தது யார்? என் முதலாளிதான் என்பதைத் தெரிந்து கொண்டேன் என்றாலும் நான் கேட்கிறேன்" என்று கூறித் தாவி அவளைத் தொட முயன்றேன்.

என் கரத்தை அவள் பலமாகத் தள்ளினாள்.

நான் திடுக்கிட்டேன். என் சுனிதாவா இப்படி நடந்து கொள்கிறாள்?

"சுனிதா! என்ன நேர்ந்தது உனக்கு?" நான் கவலையுடன் கேட்டேன்.

"என்ன நடக்க வேண்டும்? எல்லாம் நடந்துவிட்டது. உன் முதலாளி உன் நன்மைக்கும் என் நன்மைக்கும் நம் எல்லோருடைய நன்மைக்குத்தான் அப்படிச் செய்தார்..." என்றாள். குரலில் உற்சாகமில்லை.

"அப்படிச் செய்தாரா... எப்படிச் செய்தார்? என்ன செய்தார்? விளக்கமாகச் சொல்லு" என்றேன். அவள் எரிச்சலுடன் கத்தினாள்.

"காசி! இங்கிருந்து போய்விடு. என் வாசனையே உன் மீது படக்கூடாது. என் வாசனை மட்டுமன்று, பெண்கள் வாசனையே உனக்குக் கூடாது"

"ஏன்?"

"விஷமந்திரம் உனக்குப் பலிக்க வேண்டும் என்றால் நீ பிரம்மசாரியாக இருக்க வேண்டுமாம். பெண் நினைவே கூடாதாம்!"

"அவர்தான் வாழ்நாள் முழுவதும் பிரம்மசாரியாக இருந்து விஷமுறிவு மந்திரத்தைப் பலிக்கச் செய்யும் ராஜாவாக இருக்கிறாரே, அது போதாதா?"

"உன்னை அவருடைய சீடராக்க விரும்புகிறார். அவருக்குப் பிறகு விஷராஜாவாக இருக்க வேண்டுமாம். அதனால் உன்னைப் பார்க்கவே கூடாது என்று என்னைத் தடைசெய்கிறார்."

சுனிதா இப்படிக் கூறியவுடன் நான் அவளை வெறுப்புடன் பார்த்தேன். "சுனிதா! என்னை நீ விரும்பவில்லையா?" என்று கேட்டேன்.

அவளிடமிருந்து பதில் இல்லை. எனக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை.

"ஒரே நாளில் நீ மாறியது எப்படி?" என்று கேட்டேன். அதற்கு அவள் சொன்னாள்:

"காசி! உன் முதலாளி சொல்லும் காரணங்களில் நியாயம் இருக்கிறது. நாட்டிலேயே விஷமுறிவு தெரிந்தவர் அவர் மட்டுமே. அது மட்டுமன்று. கொடிய நாகங்களின் குலத்தை வேரோடழிக்கச் சபதம் ஏற்றவர் அவர் ஒருவரே. அவருக்குப் பிறகு அவர்அறிந்த வித்தையை அறிந்துகொள்ள உன் ஒருவனால்தான் முடியுமாம். அவரை எப்படியும் ஒழித்துக்கட்ட நாகராஜன் சபதம் செய்திருக்கிறான். என் தாயைக் கொண்டு அவரை அழிக்க நாகராஜன் திட்டமிட்டான். முடியவில்லை. என்னை வைத்து அவரைப் பழிதீர்க்கப் போகிறானாம் நாகராஜன். அது உறுதியாம். அவன் சபதத்தை எப்படியும் தோற்கடிக்கச் செய்ய உன்னால்தான் முடியுமாம். காசி! அதற்காக விஷமந்திரத்தை உனக்குக் கற்றுக் கொடுத்துவிட அவர் முடிவுசெய்தார். எப்போதாவது அவருக்கு நாகராஜனால் ஆபத்து ஏற்பட்டால் நீ அவரைக் காப்பாற்றி நாகராஜனைக் கொன்றுவிடுவாய் என்று திடமாக நம்புகிறார்...."

"ஓ... அதற்காக?"

அப்படியா

* **ப**ழைய கிரேக்க நாட்டுப் பெண்கள் தங்கள் வயதைத் திருமணம் ஆனதிலிருந்துதான் கணக்கிட்டுக் கூறுவார்களாம். அப்படி ஒரு வழக்கம் நீண்ட காலம் வரை இருந்திருக்கிறது.

முதல்

* **எ**வரெஸ்ட் சிகரத்தைத் தொட்ட முதல் பெண்மணி பிளாரன்ஸ் கிரிபித் ஜோய்னா.

எவரெஸ்ட் சிகரத்தைத் தொட்ட முதல் இந்தியப் பெண்மணி பச்சேந்திரி பால்.

- முக்கிமலை நஞ்சன்

"நீ பிரம்மசாரியாக இருக்க வேண்டுமாம். பெண்கள் விஷயத்தில் நீ நெருப்பாம். ஆனால், என்மீது கொண்டுள்ள காதலால் விரதபங்கம் நேரிடுமாம். என் அழகில் நீ மயங்கிவிட்டாயாம். கண்டிக்கு என்னைத் தேடிவந்தது என் மீதுள்ள ஆசையால்தானாம். என்னிடமிருந்து உன்னைப் பிரித்து விட்டால் விரதபங்கம் நேராதாம்."

சுனிதா கூறியதில் தெளிவு இருந்தது. ஆனால் முதலாளியின் சுயநலம் தெரிந்தது. நாகராஜனிடமிருந்து உயிர் பிழைக்க நான் தியாகம் செய்ய வேண்டுமாம். என்ன நியாயம்? ஒருநாளும் முடியாது.

“சுனிதா! நீ சொல்வதையும் என் முதலாளி சொல்வதையும் நான் ஏற்கமாட்டேன். உன் மீதுள்ள காதலை என்னால் மறக்க முடியாது. ஒருவேளை என்னைக் கொன்றுவிட்டால் காதல் மறந்துவிடும். சுனிதா! வா, நம் தமிழ்நாட்டிற்கு ஓடிப்போய்விடுவோம். இன்றே போய் விடுவோம். என் முதலாளி. உன் வளர்ப்புத் தந்தை விஷராஜா நாசமாகப் போகட்டும். நான் இன்று மாலை வருகிறேன். புறப்படுவதற்கு ஆயத்தமாக இரு” எனக் கூறிவிட்டு தப்பிச் செல்ல பணத்திற்கு ஏற்பாடு செய்ய வெளியே சென்றேன். உஸ்... உஸ் என்ற சீற்ற ஒலி எங்கோ கேட்டது. நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். வீடு முழுவதும் தேடினேன். யாருமிருப்பதாகத் தெரியவில்லை.

வெளியே விரைந்தேன். பகலெல்லாம் எங்கெல்லாமோ சுற்றி, புத்தாடையுடன் புதுப்பெட்டிகள் வாங்கிக் கொண்டு உருவத்தில் மாற்றம் செய்து கொண்டேன். வாடகைக் கார் எடுத்துக் கொண்டு சுனிதா வீட்டிற்கு வந்து சேர்ந்தேன்.

கதவு தாளிட்டிருந்தது. உள்ளே யாரோ பேசும் குரல் கேட்டது.

மறைந்து நின்று கேட்டேன். என் முதலாளி பேசிக் கொண்டிருந்தார். அதுபோல விலையுயர்ந்த உடை அவர் உடுத்தி நான் பார்த்ததில்லை. சுனிதாவும் இந்தியப் பெண் போல் பட்டாடை உடுத்தியிருந்தாள். அவர்கள் பேசிக் கொண்டது என் மனத்தில் ஈட்டி போல் பாய்ந்தது.

“என்ன தேடுகிறீர்கள்?” சுனிதா கேட்டாள்.

“நாகத்தின் சீறல் கேட்கிறது. எங்கிருந்து வருகிறது என்று பார்க்கிறேன். தினமும் இவ்வோசை வருகிறது. ஒரு குரல் கேட்கிறது. எப்படியாவது விஷராஜாவை மயக்கிவிடு” என்றது அந்தக் குரல்.

“சுனிதா! நாகராஜன் உன்னிடம் பேசினாரா?” என் முதலாளி கேட்டார். மிக நெருங்கி உட்கார்ந்திருந்தார்.

“ஆமாம். இதோ பாருங்கள். இந்த விலையுயர்ந்த மாணிக்கக் கல்லை என்னிடம் கொடுத்தார். சுனிதா! உன் தாய் செய்ய முடியாததை நீ செய்ய வேண்டும். முட்டாள், விஷராஜா ஒரு தவறு செய்துவிட்டான். அழகில் மயங்கியதுடன் உன்னுடன் உடலுறவும் கொண்டுவிட்டான். பல ஆண்டுகள் கட்டிக்காத்த தன் சக்தியை இழந்து விட்டான். இனி அவன் என்னை ஒன்றும் செய்ய முடியாது. ஆனால், அவனுடைய சீடன் காசி

விஷமந்திரத்தைக் கற்றிருக்கிறான். அவன் எந்த நேரமும் அவரைக் காப்பாற்றி விடுவான்” என்று கூறினான்.

விஷராஜா இதைக் கேட்டு நடுநடுங்கினார்.

“சுனிதா! நாகராஜனா இப்படி சொன்னான்? இப்போதுகூட இங்கு எங்காவது இருக்கலாம். காசி எங்கே இருக்கிறான். உனக்குத் தெரியுமா?” என்று பரபரப்புடன் கேட்டார்.

சுனிதா பதில் சொல்லவில்லை. “அப்படி ஏதாவது நேர்ந்து விட்டால் நீ ஒரே ஓட்டமாய் அவனிடம் ஓடி விவரத்தைச் சொல்லத் தாமதிக்காதே. ஆனால்... ஆனால் காசிக்கு முழு வைத்தியம் தெரியாதே... மேலும் மேலும்” என்று கூறி நிறுத்தினார்.

“நீங்கள் நினைப்பது போல் காசி பிரம்மச்சர்யத்தை இழக்கவில்லை”

“அப்படியா?”

“ஆமாம். அவரும் நானும் தனியாக இருக்கும் எவ்வளவோ வாய்ப்புகள் கிடைத்தன. அவரை ஆண் கண்ணகி என்று கூறலாம். ஆனால் நீங்கள்தான் தவறிவிட்டீர்கள். தந்தை என்று கூறி என்னை மோசம் செய்துவிட்டீர்கள். மேலும் நீங்கள்



திருப்பதியிலிருந்து தென் கிழக்கே 70 கி.மீ தொலைவில் நாகலாபுரம் உள்ளது. இது கிருஷ்ணதேவராயரால் அவரது தாயாரின் நினைவாக நிர்மாணிக்கப்பட்ட நகரம். இங்குள்ள வேதநாராயண சுவாமி கோயிலில் இறைவன் மேற்கு பார்த்து எழுந்தருளியுள்ளார். நான்கு வேதங்களை மீட்டு அதை பிரம்மாவிடம் ஒப்படைத்த விஷ்ணுவின் மச்ச அவதாரத்தை சிறப்பிக்கும் கோயில் இது.

– க.ரவீந்திரன்

காசிக்கு விஷமுறிவு மந்திரம் முழுமையும் கற்றுத்தரவில்லை. அதனால் காசி எப்படி உங்களைக் காப்பாற்ற முடியும்?" எனக் கேட்டாள்.

சுனிதா பேசியது எனக்குத் திருப்பதியாக இருந்தது. 'எப்படியும் நாகராஜன் சபதத்தை நிறைவேற்றிக் கொள்வான். சுனிதா என்னிடம் ஓடிவருவாளா? எனக்கு விஷமுறிவு மந்திரம் தெரியாது. நான் என்ன செய்வேன் தெரியுமா? சுனிதாவை அணைத்துக் கொள்வேன். அங்கே என் மாஜி முதலாளி செத்துக் கிடப்பார். சுனிதா என்னிடம் வந்துவிடுவாள்' என்று முடிவுசெய்து அங்கே நான் வந்த சுவடு தெரியாமல் என் இருப்பிடம் சென்றேன். "விஷராஜா இறந்துவிட்டார் என்றால் நான் ஏன் தமிழ்நாட்டுக்குச் செல்ல வேண்டும்?" என்று வில்லனைப் போல் சிரித்துக் கொண்டேன். பயண உடைகளைக் களைந்து நாற்காலியில் ஓய்வாக அமர்ந்தேன்.

இதுவரை என் நண்பன் காசி சொல்லி முடித்தான். தொடர்ந்து பேசியதில் அவனுக்குக் களைப்பு மிகுந்தது.

என் மனைவியின் சாமர்த்தியத்தை முன்பே புகழ்ந்திருக்கிறேன். மளமளவென்று காசி பேசியவற்றை ஒலிப்பதிவு செய்திருந்தாள்.

"சற்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். எங்களுடன் சாப்பிடுங்கள். பிறகு கதையைத் தொடரலாம்" என்றேன் நான், காசியின் கரங்களைப் பிடித்தபடி.

"அதுவும் சரிதான். ஒரு டேப் சரியாகிவிட்டது. இன்னொரு டேப் வேண்டும். வாங்கி வந்து விடுங்கள். மிகவும் சுவையான செய்திகள் இனிமேல்தான் இருக்கின்றன. விஷராஜாவை நாகராஜன் கொத்தியதா, சுனிதா காசியை நோக்கி ஓடினாளா? விஷராஜா பிழைத்தாரா? காசி இலங்கையை விட்டு தமிழ்நாட்டிற்கு ஏன் வந்தார்? இவ்வளவு செய்திகளும் தெரிந்தாக வேண்டுமல்லவா?" என்றாள்.

"நான் நினைக்கிறேன். விஷராஜா பிழைத்துக் கொண்டிருப்பார். சுனிதாவைக் கல்யாணம் செய்து கொண்டிருப்பார். காதல் சோகத்தினால் காசி தமிழ்நாட்டிற்கு வந்ததிருப்பார். அவ்வளவுதானே?" என்றாள் மீண்டும்.

காசி பெரிதாகச் சிரித்தார். “ஐயாவை விட அம்மாவுக்குத்தான் ஆர்வம் அதிகம் போலிருக்கிறது. கண்டியிலிருந்து சுனிதாவைக் காரில் தூக்கிப்போட்டுச் சென்ற பிறகு நானும் மற்றொரு வண்டியில் விரைந்த பிறகு உங்கள் மனநிலையை நான் எண்ணிப் பார்த்தேன். பல ஆண்டுகள் கழிந்த பிறகு நீங்கள் கண்டி நடனத்தைக் கண்டு ரசித்ததையும் மலர்த் தோட்டத்தில் மலர்களை ரசித்து மகிழ்ந்ததையும் நான் அறிந்தேன். ஓர் அற்புதமான கவிதையை எழுதியிருந்தீர்கள் என்பதை உங்கள் கவிதைத் தொகுதியிலிருந்து படித்தேன். படித்தவுடனேயே இதோ அந்தக் கவிதையை வரிவிடாமல் சொல்கிறேன்.”



கண்டி நடனம் கட்டுரையில் நான் எழுதிய கவிதையை அப்படியே மனப்பாடம் செய்தது போல் காசி ஒப்பித்தது வியப்பாக இருந்தது.

என் மனைவி அதையெல்லாம் ரசிக்கவில்லை. “பிறகு என்ன நடந்தது? சொல்லுங்கள்!” என்று காசியை வற்புறுத்தினாள்.

“அம்மா! நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்குமல்லவா? நான் என் அறையில் சுனிதா வருவதை எதிர்பார்த்து அமர்ந்திருந்தேன். எனக்கு சுனிதா மீது பயங்கரக்

கோபம். காதலைத் தியாகம் செய்துவிட்டு தந்தை போல் இருந்தவரிடம் தன் உடலைக் கொடுத்தாளே? இவளை நான் ஏற்பதா? நாகராஜன் அவள் வீட்டில் எங்கோதான் இருக்கிறான் என்பதை அன்றே புரிந்து கொண்டேன். என் முதலாளி சுனிதாவிடம் பிரம்மச்சர்யத்தை இழந்தவுடன் நாகராஜன் தன் சபதத்தை நிறைவேற்றிக் கொள்வது உறுதி. சுனிதா விரைந்து வருவாளா? நமக்கு விஷமந்திரம் தெரியாது. அவளை அடித்து வீழ்த்துவதில் எனக்கு என்ன லாபம்? என் முதலாளி அடிப்பார் என்ற செய்தி அறிந்தால் போதும். அதற்காகத் துயரப்படும் பலநூறு அக்கம் பக்கத்தவர்களைப் போல் நானும் கண்ணீர் சிந்திவிட்டு வருகிறேன்" என்றெண்ணியவாறு துயரச் செய்தி வருவதை எதிர்பார்த்து உட்கார்ந்திருக்கிறேன்..."

என் மனைவி குறுக்கிட்டாள்.

"என்ன நியாயம் இது? உயிருக்கு உயிராகக் காதலித்தவளை இப்படியா கைவிடுவது?" என்றாள்.

"அம்மணி! தமிழ்நாட்டில் என் சொந்த ஊரில் நான் மூன்று முடிச்சுப் போட்ட பெண் எனக்காகக் காத்திருக்கிறாள். அவளுக்கு துரோகம் செய்யலாமா?" என்று பதில் கூறினான் காசி.

"சுனிதாவுக்கு இப்படி நேராதிருந்தால் மனைவியை மறந்து விடுவீர்களோ?"

என் மனைவி கோபமாகக் கேட்டாள்.

"ஏ! கதாசிரியை செங்கமலத்தம்மாளே! சற்று நேரம் சும்மாயிருக்கிறாயா? கிளைமேக்ஸ் காட்சியில் பாட்டு பாடுவது போல்" என்றேன். காசி தொடர்ந்தான்.

"அன்று முழுவதும் செய்தி ஏதும் வரவில்லை. ஆனால் விஷராஜா என்று புகழ் பெற்ற என் முதலாளி இறந்து விட்டான் என்ற செய்தி ஊரெங்கும் பரவியது. நான் சுனிதா வீட்டிற்கு விரைந்தேன்.

அங்கே கண்ட காட்சி – திட்டமிட்டபடி நாகராஜன் முதலில் சீறிப் பாய்ந்து சுனிதாவைத் தீண்டி விட்டு என் குருநாதரையும்

கொத்தியிருக்கிறான். சுனிதாவைத் தீண்டியவுடனேயே நாகராஜனை என் குருநாதர் தன் கையிலிருந்த பெருந்தடியால் ஒருபோடு போட்டிருக்கிறார். ஆனால் கடும் நாகங்களுக்குத் தலைவரான நாகராஜா நான்கு அடி உயரத்தில் சீறியெழுந்து குருநாதரைப் பல இடங்களில் தீண்டி ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டிருக்கிறான். நொடியில் விஷம் தலைக்கேறியது. ஒரே சமயத்தில் சுனிதா, நாகராஜன், என் குருநாதர் விஷராஜா மூவரும் மாண்டொழிந்தனர்.”

காசி கதை சொல்லி முடித்தான். உடனே இருகரங்களையும் கூப்பி எழுந்து நின்று கொண்டான். பிறகு சொன்னான்:

“சார்வாள்! பிறகு என்ன நேர்ந்தது என்பதை சில வார்த்தைகளில் சொல்கிறேன். எனக்கு கொழும்பிலோ, ஈழத்திலோ இருக்கப் பிடிக்கவில்லை. சொந்த ஊருக்கு வந்து சேர்ந்துவிட்டேன். என் மனைவி சாமர்த்தியம் மிக்கவள். இதுவரை நான் அனுப்பி வந்த பணத்திலிருந்து நல்ல விளைநிலங்களைக் கிராமத்தில் வாங்கியிருந்தாள். சில ஆண்டுகள் வேளாண்மை செய்து வந்தேன். பிறகு சென்னைக்கு வந்து எனக்குத் தெரிந்த சிகை அலங்காரக் கடை வைத்தேன். நான் அறிந்த தொழிலைக் கொண்டு கௌரவமாய் வாழ்ந்து வருகிறேன். பல ஆண்டுகளாக சார்வாளைத் தேடிக் கொண்டிருந்தேன். சில மாதங்களாக செங்கமலத்தம்மாள் பெயரில் தொடர்கதையைப் பத்திரிகையில் படித்த பிறகு அந்த அலவலகத்திற்குப் போன் செய்து முகவரியைப் பெற்றுக் கொண்டேன். இது ஓர் ஆண்பிள்ளை எழுதுவது என்பதை புரிந்து கொண்டேன். அவ்வளவுதான். இனி அவ்வப்போது சந்திப்போம்” என்று கூறி விடைபெற்றான் காசி.

‘நாமும் கதையை முடித்தோம். நானிலம் முற்றும் நலனுடன் வாழ’. உண்மைதான். இப்படி கதைக்குள் கதை, கதைக்குள் கதை என்று எழுதினால் குழப்பம்தானே மிஞ்சும்? மதனகாமராசன் கதை, விக்கிரமாதித்தன் கதைப் போல் ஓர் ஆயிரம் ஆண்டுகள் கழித்து இந்தக் கதைக்குள் கதையைப் படித்து என்ன சொல்வார்களோ? சொல்லிவிட்டுப் போகட்டுமே! எல்லோரும் எப்போதும் பேசும்படி ஒரு படைப்பு இருப்பதுதானே சிறப்பு!

(முற்றும்)